

# திறவுகோல்

2053

புரட்டாசி

மாத இதழ்

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பட்டினப்பாலை காட்டும் பல்பொருள் துறைமுக வணிகம் மற்றும் உழவர்களின் நல் இயல்புகள்



திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். தமிழை நேசிக்கும் சுவாசிக்கும், தமிழீழப் புனிதப்பணியில் உயிரீகம் செய்த அனைத்துத் தமிழர்களுக்கும் வீர வணக்கம்.

தமிழுக்காக, தமிழ் மண்ணுக்காக தமிழர்களின் மானம் காக்க தன் உயிரை துச்சமாக எண்ணி உயிர்த்தியாகம் செய்த எமது தமிழீழ மாவீரர்களின் நினைவுகளை நெஞ்சில் தாங்கும் ஒவ்வொருவரும் தமிழர்களின் தொன்மையைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்வதும் தமிழ் பண்பாட்டை பற்றி தெரிந்து கொள்வதும், தமிழ் காட்டிய அறம் வழி நின்று வாழ்வதும், வாழ வைப்பதும் தமிழர்களாய் பிறந்த நமது ஒவ்வொருவரின் கடமை என்றே நினைக்கிறேன். அக்கடமையின் ஒரு சிறு துளியைத் தான் இந்த பட்டினப்பாலை பற்றி ஒவ்வொரு வாரமும் படித்து விளக்கி எழுத தமிழன்னை என்னைப் பணித்திருப்பதாகச் பணிவன்புடன் நினைத்துக்கொள்கிறேன்.

சென்ற வாரம் பட்டினப்பாலை காட்டிய தமிழர்கள் பயன்படுத்திய விளம்பர உத்தியான பல்வேறுபட்ட கொடிகளைப் பற்றி பார்த்தோம்.

கோயில் வாசலிலே, ஏற்றப்பட்டுள்ள கொடி, திருவிழாவுக்காக ஏற்றப்பட்டிருக்கும் கொடி, பட்டிமண்டபத்திலே பறக்கும் கொடி, கப்பல்களிலே பறந்து கொண்டிருக்கும் கொடி, கள்ளுக்கடை வாசலிலே கட்டப்பட்டிருக்கும் கொடி ஆகிய எண்ணற்ற கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றன என்றும் பார்த்தோம். இவ்வாறு பலவகை கொடிகளால் சூழப்பட்டு சூரியனின் வெயில் பட முடியாத அளவிற்கு குளுமையான செழுமையான நீங்காத நிலைத்த புகழை உடைய தேவர்கள் காத்து நிற்கும் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து குவிந்த பொருட்களை பற்றியும் தெருக்களை பற்றியும் கீழ்க்கண்ட வரிகள் எடுத்து இயம்புகின்றன.

செல்லா நல் இசை அமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங் கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்

*கங்கை வாரியம் காவிரிப் பயனும்*
*ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்*
*அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி*
*வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்(185-193)*

*இவ்வடிகளில் குறிப்பிடப்படும் புரவி என்கிற குதிரை இந்திய நாட்டு விலங்கு அன்று. ஆனால் இந்திய நாட்டின் அனைத்து அரசுகளும் விரும்புகின்ற ஒன்று. ஓர் அரசாங்கத்தின் நால்வகைப் படையான தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படையுள், குதிரை படைக்குத் தேவையான ஒன்று. அரேபிய வணிகர்கள் மிகுந்த இலாபத்திற்குக் குதிரைகளை விற்பதுடன் அதை வாங்குவதற்க அரசர்களும் போட்டி போடும் நிலையில் இருந்தனர். அதனால் குதிரை வந்தவுடன் முதலில் வாங்குவதற்காக அரசு ஊழியர்கள் துறைமுகத்தில் காத்து இருப்பர்.*

*தமிழ்நாட்டில் குதிரைகள் இறக்கமதி செய்யப்பட்டாலும் அவை இங்கு நீண்ட நாள் உயிர் வாழ முடியவில்லை. தட்ப வெப்பநிலை, உணவுப் பழக்கம் இவற்றால் அவை நோய் வாய்ப்பட்டன. அத்துடன் அடிக்கடி நுட்பம் பற்றி அரேபிய வணிகர்கள், வெளிப்படக்கூறாமல் மறைத்து வைத்ததால் வெறும் கால்களுடன் பல மைல் ளரம் ஒடும் குதிரைகளால் தாக்குப் பிடிக்க முடியாமல் உயிர் நீத்தன. இதனால் கப்பல் எப்போதும் வரும் என்று காத்திருந்து பெற்ற அரிய செல்வமாகக் குதிரை திகழ்ந்ததால் ' நீரின் வந்த நிமிர்பரிப் புரவி' என்று சிறப்பிக்கப்பட்டது.*

*வியாபாரத்திற்காகக் காவிரிப்பூம்பட்டினத்திலே பல பண்டங்கள் வந்து குவிந்திருந்தன. அப்பொருள்கள் உள் நாட்டிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் வந்தவை. வேற்று நாடுகளிலிருந்து குதிரைகள் கடல் வழியாக வந்திருக்கின்றன. அவைகள் உயரமானவை, விரைந்து ஓடும் தன்மையுடையவை, நிலத்தின் வழியே வண்டிகளில் கொண்டு வரப்பட்ட கரிய மிளகு மூட்டைகள், இமயமலையிலே பிறந்த சிறந்த மாணிக்கங்கள், உயர்ந்த பொன்வகைகள், மேற்குத் தொடர்ச்சி மலையிலே விளைந்த சந்தனக் கட்டைகள், அகில கட்டைகள், தெற்கக் கடலிலே விளைந்த முத்துக்கள், கீழைக்கடலிலே தோன்றிய பவளங்கள், கங்கை நதி பாயும் நிலங்களிலே விளைந்த செல்வங்கள், இன்னும் பல அருமையான பண்டங்களும், மிகுதியான பண்டங்களும் பூமி தாங்க முடியாமல் நிறைந்து, செல்வங்கள் செழித்துக் கிடக்கின்றன என்பதனை மேற்கண்ட வரிகள் புலப்படுத்துகின்றன.*

*அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர் கரும்பைத் தமிழ்நாட்டுக்குப் கொண்டுவந்தனர் என்று சங்கப்பாடல் குறிப்பிடுகிறது.*

*அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும் நீரக இருக்கை ஆழி சூட்டிய தொல் நிலை*

*மரபின் நின் முன்னோர் (புறம் 99)*

*கரும்பு நியூகினியா தேயத்தில் கி.மு. 6000 ஆண்டுக்கு முந்தியது என்பது அதன் வரலாறு. கரும்பு அது ஈழநாட்டின் வழியே தமிழகம் வந்திருக்கலாம். இதனையே பட்டினப்பாலை நூல் ஈழத்து உணவு எனக் குறிப்பிடுகிறது என எண்ணிப் பார்க்க வேண்டிய நிலை உள்ளது.*

*பட்டினப்பாலை க்கு உரை எழுதிய இரா. இராகவ ஐயங்காரின் கருத்துப்படி ஈழத்து பொருட்கள் என்ற பொருள் கொள்ளுமாறு ழத்து உளவும் என்று இருக்க வேண்டும் என்று கூறுகிறார். இதைப் போலவே சோமசுந்தரம் அவர்களின் உரையில் ஈழத்தில் இருந்து சோழநாட்டிற்கு உணவுப் பொருள்களில் வந்ததாக தெரியவில்லை. எனவே ஈழத்துணவும் என்பது ஈழத்துளவும் என்றே இருத்தல் வேண்டும் என்கிறார். ஈழத்துணவும் என்னுந் தொடர்க்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையும் இல்லாததால் பிற்காலத்தார் அங்ஙனம் பிறழக்கொண்டமைக்குக் காரணமாகலாம் என்றும் தெரிவிக்கின்றனர்.*

*எது எப்படியோ ஈழத்திற்கும் தமிழகத்திற்குமான உறவானது, சங்ககாலம் தொட்டே, தொடர்ந்துவரும், தொப்புள் கொடி உறவாகும் என்பதற்கு பட்டினப்பாலையும் சான்று பகர்கின்றது.*

*காவிரிப்பூம்பட்டினத்து உழவர்களின் நல் இயல்புகள் எவ்வாறு இருந்தது என்பதைக் கீழ்க்கண்ட வரிகள் படம் பிடித்து காட்டுகின்றன*

*நீர் நாப்பண்ணும், நிலத்தின் மேலும்,*
*ஏமாப்ப இனிது துஞ்சிக்      **195***
*கிளை கலித்துப் பகை பேணாது,*
*வலைஞர் முன்றில் மீன் பிறழவும்,*
*விலைஞர் குரம்பை மா ஈண்டவும்,*
*கொலை கடிந்தும், களவு நீக்கியும்,*
*அமரர் பேணியும், ஆவுதி அருத்தியும்,      **200***
*நல் ஆனொடு பகடு ஓம்பியும்,*
*நான்மறையோர் புகழ் பரப்பியும்,*
*பண்ணியம் அட்டியும், பசும் பதம் கொடுத்தும்,*
*புண்ணியம் முட்டா தண்ணிழல் வாழ்க்கைக்*
*கொடும் மேழி நசை உழவர் (194- 205)*

*நீரின் நடுவிலும் நிலத்தின் மேலும் இனிமையாகத் துயின்று சுற்றமும் நட்பும் தழைத்து, பகை இல்லாமல் மீன் பிடிப்பவர்களின் முற்றத்தில் மீன்கள் பாயவும், ஊன் விற்பவர்கள் குடிசைகளின் முன் விலங்குகள் திரண்டு இருக்கவும், கொலையையும் களவையும் நீக்கியும்,*

தேவரைப் போற்றியும், வேள்விகள் செய்து படைக்கப்பட்ட உணவை உண்டும், நல்ல பசுக்களுடன் எருதுகளைப் பாதுகாத்தும், நான்மறை ஓதுபவர்களின் புகழைப் பரப்பியும், பண்டங்களைச் செய்து வருவோர்க்குக் கொடுத்ததும், சமைக்காத அரிசி போன்ற உணவைக் கொடுத்ததும், அறம் குறையாது, குளிர்ந்த நிழல் போன்ற வாழ்க்கையை உடைய தங்கள் வாழ்வாதாரமாக விளங்கும் மறைந்த கலப்பையை மிகவும் விரும்பும் உழவர்கள் வாழும் சிறப்புமிக்க பட்டினமாக விளங்குகின்றது பூம்புகார்.

குடிமக்களுக்கு நிம்மதி எங்கிருந்து வந்தது? அவர்களின் வாழ்க்கைப் பாங்கிலிருந்து வந்தது. வாழ்க்கைப் பாங்கு எப்படி இருந்தது? கொலைத் தொழிலை அவர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள். களவுத்தொழிலை அவர்கள் இல்லாமல் செய்துவிட்டார்கள். தேவர்களைப் பேணிப் பாதுகாத்தனர். தேவர்களுக்கு வேள்வி உணவை ஊட்டினர். பால்மாடுகள் மட்டுமல்லாமல் காளைமாடுகளையும் அவர்கள் பேணிவந்தனர். நான்மறையாளர்களின் புகழைப் பரப்பினர். பசித்தவர்களுக்கு உணவு படைக்கும் போது சுட்ட பலகாரங்களையும் சேர்த்துப் படைத்தனர். இப்படியெல்லாம் வாழ்வதுதான் புண்ணியம் என்று கருதினர். இப்படிப்பட்ட வாழ்க்கையில் முட்டுப்பாடு இல்லாமல் பிறருக்கு ஈரநிழல் தந்து வாழ்ந்து வந்தனர்.

தமிழர்கள் இவ்வாறு உலகமெங்கிலும் வணிகம் செய்தார்கள் என்னென்ன பொருட்கள் உலக நாடுகளிலிருந்து தமிழர்களின் துறைமுகமான பூம்புகாரில் வந்து குவிந்தன தெருக்கள் எவ்வாறு இருந்தன அங்கே வாழ்ந்த உழவர்கள் "செய்யும் தொழிலே தெய்வம்" என்று இன்று நாம் கூறுவதைப் போல தங்களது தொழிலுக்கு ஆதாரணமான கலப்பையை எவ்வாறு விரும்பினார்கள் என்று பழந் தமிழரின் வாழ்வியலை வரைபடமாக காட்டுகிறது பட்டினப்பாலை.

இதுவரை நேரம் ஒதுக்கி வாசித்த அனைத்து வாசக அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. அடுத்த திறவுகோல் இதழில் பட்டினபாலை நாயகனான கரிகாலச் சோழனை பற்றி பார்க்கலாம். பட்டினப்பாலையின் நாயகன், கரிகாலன் எனப் பெயரெடுத்த நமது தேசிய தலைவரை கண்முன் நிறுத்துவதையும் காணலாம்.

நன்றி... அடுத்த வாரம் அடுத்த இதழில் சந்திக்கலாம்.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

# சூடம் காட்டிப் பிரசாதம்

கொடுக்க
என் வீட்டைக் கடந்து விட்டது
தேர்.
தெருவாசலில்
இன்னமும் காத்திருக்கிறேன்.
தேவதை
உன் தரிசனத்திற்காக...!

/
சித்திரமும் கைபழக்கம்
செந்தமிழும் நாபழக்கமென்று
சொன்ன நம் முன்னோர்கள்தான்.
கண்பார்த்தால்
கைசெய்ய வேண்டுமென்றும்
சொல்லியிருக்கிறார்கள்.

/
உன் ஒப்பனை அறையில்
ஓயாமல்
உன்னை உற்று நோக்கும்
நிலைக்கண்ணாடி நான்!

/
காட்டருவி
பெருக்கெடுத்த நாளில்
யாவரும் நதியின்
மூர்க்கம் காணலாம்.

/
எனக்குப் பின்னாலிருக்கும்
மரத்தின் வேர்கள்
என்னெதிர் முகம்வரை
விரவியிருக்கும்.

என்னுயரத்திற்கு மேல்
பன்மடங்கு மண்ணில்
ஆழப்பரவி இறுக்கத்தின்
புழுக்கத்தில் வேகும் ஆணிவேர்.
கிளிகளோ, அணில்களோ;
மந்திப்படையோ தின்று
மிச்சம் விட்ட கனிகளில்
சுவைக்கூடி இனித்திடும்.
காற்றிலும், பனியிலும்;
மழையிலும், வெய்யிலிலும்;
செத்துச் செத்து உயிர்வாழும்
மரங்கள்.

/
புருவங்களுயர்த்தி
கேள்விக் கணைகள் தொடுக்கிறேன்.
இதழ்களை விரித்தும் விரிக்காமலும்
பதிலெனப் புன்னகைக்கிறாய்.

/
இனியதொரு நிகழ்வாய்
இன்று
மரக்கன்றொன்றை நடுகிறேன்.
நாளை
என் மகனும் அவன் பிள்ளைகளும்
மகிழ்வுடன் கேட்டு மகிழலாம்
இனிமையான குயிலின் பாட்டு.

/
சிற்பியின் கையில்
உளியும் சுத்தியலும்
கலையும் பாறையின் தவம்.

/
நீயும் தொலைந்து விட்டாய்
நானும் தொலைந்து போனேன்

இனி நம்மை நாமே
கண்டெடுத்தால் உண்டு
நமக்காக எதிர்காலம்.

/
கடல் சேர்ந்த நதிகள்
மீண்டுவரும் ஆவலில்...
கரையைத் தொடும் அலைகள்.



—
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

---

# மாய உலகம்

ஒப்பனை மிகுந்த கற்பனை உலகம்/
விற்பனை முறையில் அர்ப்பணம்
கொள்ளும்/

புறங்கள் மட்டுமே இங்கு அழகாக/
நித்தம் அகங்கள் யாவும் சிதைவாக/

உண்மை நிலையை உணர்ந்தால்
போதும்/
பொய்மை தன்மை எளிதாய் விளங்கும்/

எங்கும் புறத்தை காட்டும் கண்ணாடி/
அகத்தைக் காட்டத் தொடங்கி
விட்டால்/

முதலில் மனிதனின் எதிரியே அதுவாகும்/
எதிலும் மெய்ப்பொருள் அறிவது
அரணாகும்/

மாயத்தின் வலையை உலகமே விரிக்கும்/
மயங்கி விழுந்தால் வாழ்க்கையை
அழிக்கும்/

உலகில் மனிதன் வாழ்க்கை அற்புதமே/
நித்தம் அறிவால் வாழ்க்கை சிறந்திடுமே/

வாழ்வில் மனிதம் என்றும்
நிலைத்திடுவோம்/
வாழ்வை வாழ்ந்து காட்டியே
வென்றிடுவோம்/

—
வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.



# கேளடி கண்மணி

பெண் குழந்தைகளை முடிந்தவரை பிறந்த வீட்டில் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அவள் புகுந்த வீட்டில் பிறருக்காக வாழப்போகிறவள்.

இந்த வாக்கியம் எவ்வளவு உண்மையோ அந்த அளவிற்க்கு கண்டிக்கத்தக்கது. பெண்கள் பிறருக்காக வாழ வேண்டும் போன்ற பிதற்றல்கள் எல்லாம் சமூகத்தில் பெண்களுக்கெதிராக திட்டமிட்டு விதைக்கப்பட்டவையே. "பெண்ணியம்" இங்கே சமீபகாலமாக பேசப்படும் ஓர் முக்கிய விடயம். பல்லாண்டுகாலமாக தேடப்பட்டும் போராடப்பட்டும் வரும் விடயமும் கூட. இந்த வார்த்தையின் அர்த்தம் அனைத்து பெண்களையும் சென்றடைந்து விட்டதா..?? என்றால் இல்லை நமக்கு தெரிந்த பெண் உரிமை எல்லாம் குடும்ப அட்டையில் குடும்பத் தலைவியாகிவிட்டதோடு முடிவடைகிறது. அல்லது மேற்கத்திய ஆடை அணிந்து சமூக வளைதலங்களில் பதிவிட்டால் போதும் அதுவே பெண்ணியம்

ஆண்களை காட்டிலும் பெண்களின் பாலின சதவிகிதம் அதிகரித்துள்ளது. தற்போது பெண்களின் கல்வி, சுயபொருளாதாரம், வேலைவாய்ப்பு, போன்றவற்றில் தங்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து வருகிற நிலையில் தங்களின் கல்வி திருமணம் எதிர்காலம் போன்றவைகளில் அவர்களில் உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டே வருகிறது.

என் எதிர்காலத்தை நானே தீர்மானிக்கும் திறன் வந்துவிட்டது. ஆகவே பெண்ணியத்தை அடைந்துவிட்டோம் என அத்தோடு முடித்துவிடுகிறோம்.

திருமணத்திற்கு பின்னான நம் வாழ்வில் பெண்சுதந்திரம் முழுமையாக நமக்கு இருந்தால் அதுவே பெண்ணியம்.

இங்கே காதல் திருமணமோ..!! பெற்றோர் பார்த்து மணமுடித்த திருமணமோ..!! இங்கே யாராகினும் அவர்கள் குடும்பத்தினர் பெண்ணிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவதில்லை. பெண்களின் உலகம் ஆண்களால் கட்டமைக்கப்படுகிறது என பெண்களை முழுமையாக நம்பவைத்துவிட்டது இந்த சமூகம்.

நாமும் நம்பிக்கொண்டுதான் வளர்ந்தோம் ஏனென்றால் படிக்காத வெகுளியான அம்மாளைக்களை கொண்ட கடைசி தலைமுறை நாம்தான். கிராமமோ நகரமோ அங்கு வாழும் பதின்ம வயது பெண்களின் கனவென்பது என்னவோ அதனை தன் திருமணத்திற்கு பிறகு சென்றடைந்தார்களா...?? என்றால் நூற்றில் பாதி கூட இல்லை நான் இங்கே புதுமை புரட்சி பற்றியெல்லாம் நான் பேசவே இல்லை. சாமானிய பெண்களின் சாதாரணக் கனவுகள் சிதைக்கப்படக் கூடாது என்பதற்காகவே சொல்கிறேன். எட்டாத உயரத்தில் நம்

உரிமைகள் இருந்தாலும் தற்காலத்தில் பெண்களுக்கு கல்வி என்பது எட்டாக்கனி இல்லை. பெண்கள் பட்டங்கள் பெறுவது கூட நல்ல மாப்பிள்ளையை பிடிக்கத்தான் என பிசகாமல் கூறி விடுகிறோம்.

திருமணம் வேலைவாய்ப்பு போன்றவையில் நமக்கு பிடித்தமான அனைத்தையுமே தேர்ந்தெடுக்கும் பெண்கள் கொடுத்து வைத்தவர்கள் தான் ஆனால் திருமணத்திற்கு பின்னான வாழ்க்கைமுறை நம் வாழ்வை தலைகீழாக மாற்றும் அந்த வாழ்க்கையை நாமாக விரும்பி தேர்ந்தெடுத்தப் போதிலும், அன்பு பாசம் சரணாகதி போன்ற வார்த்தைகள் நம்மை நமக்கே பூ சுற்ற வைக்கும். மனதின் கனவுகள் மழுங்கி மணவாளன் பற்றிய கனவுகள் மேலோங்கும். நான் வலிமையானவள் என்ற எண்ணத்தையெல்லாம் பெயர்த்து விட்டு மென்மையானவாள் நான் என்று மெழுகுவர்த்தியாய் மாற்றி நம்மை உருக வைக்கும். பழக்கவழக்கங்கள் மாறிவிடும். பண்புகள் பறந்துவிடும். உடல் உணர்வுகள் நம்மை ஆட்கொண்டு உள்ளத்தில் உணர்வுகள் உறைந்து போய் நம் உலகத்தை சுருக்கிவிடும்.

ஊராரின் வாய்க்கு பயப்படவைக்கும்.உனக்கு பழக்கமே படாத வீட்டு வேலைகளை உன்னை பார்க்க வைக்கும்.பட்டம் பெற்று நீ பெற்ற பாராட்டை விட பாத்திரம் தேய்த்து பெற்ற பாராட்டை பெரிதாக நினைக்க வைக்கும். தனித்துவம் என்பதெல்லாம் தாய்மையடைந்தது தான் என உன்னில் தோன்ற வைக்கும்.

குழந்தை பிறந்த பின்பு உனக்கு இருபது வயதானாலும் உனக்கு வயது அறுபதுதான்.ஏனெனில் அவர்களை வளர்ப்பதற்காகவே நாம் வடிவெடுத்து இருக்கிறோம் என எண்ணம் நமக்கே வளர்ந்துவிடும் வளர்த்தும் விடுவார்கள்.

ஒப்பிட்டு பேசினால் பிடிக்காது என்ற எண்ணம் கூட நமக்கு மறந்து மற்றவர்களோடு நம்மை நாமே ஒப்பிட்டு நாம் இவ்வளவுதானோ இதற்கு மேல் ஒன்றும் முடியாதோ..??? என்றே நம்ப வைக்கும்.

நாம் வாழும் வாழ்க்கையை நம் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்று இன்னும் வாழ்வையே ஆரம்பிக்காத நிலையில் இருக்கும் நம்மை நினைக்க வைக்கும். குழந்தையை வளர்ப்பையே குறிக்கோளாக ஆக்கும். மேலும் நாம் சரியான முறையில் அவர்களை வளர்த்து வரும் வேளையில் அதன் மீதும் அதே ஒப்பீட்டை செலுத்தி நமக்குள்ளும் செலுத்தி நாம் பிள்ளையை சரியாக வளர்க்க வில்லையோ...??? என நம்மையே எண்ண வைத்து அவர்கள் மனதில் என்ன இருக்கின்றதென்றே அறியாமல் நம் கவலைகளை எல்லாம் கண்களில் வைத்துக் கொண்டு அவர்களின் மனநிலையையும் மதிக்காமல் கனவுகளையும் சிதைத்து அதட்டி பேசினாலே அழும் குழந்தைகளையும் தலைமுடி உதிர்வதற்காய் உயிர்விடும் குழந்தைகள் உள்ள ஒர் தலைமுறையை உருவாக்கவைத்துள்ளது இந்த சமூகம்.

ஏனெனில் இவைதான் பெண்ணின் கடமை என நம்பவைக்கப்பட்டிருக்கிறோம்.

பள்ளியில் மாரத்தானில் வெற்றி பெற்ற பெண்ணை நீ உன் மாமியாரை வெற்றி பெற்றாலே போதும் என்று அம்மாக்கள் நமக்கு அறிவுரை செய்வார்கள். ஆயிரம் காலத்து பயிரை அடைகாக்க நம்மை அடைத்து வைப்பார்கள்.

பெண்களுக்குள் ஒற்றுமை இல்லை என்ற ஆண்களின் குரல் ஓங்கி ஒளிக்கிறது. இப்படி அவர்கள் சொல்லிக்கொண்டே இருந்தால் தானே ஆண்களின் கூட்டுகளவாணித்தனம் வெளியே வரமால் பார்த்துக்கொள்ளமுடியும்.

சினிமா, நெடுந்தொடர், பட்டிமன்றம் என மக்களைச் சென்றடையும் எந்த ஊடக நிகழ்வும் சரி அங்கே பெண்கள் கட்டாயம்  சிறுமைப்படுத்தப்படுவார்கள். அதனை  பெண்களையே ரசிக்க வைப்பார்கள். ஆண்களை குறைகூறி இங்கே என்ன ஆகப்போகிறது. பெண்களை பெண்களே சிறுமைப்படுத்தும் நிலைதானே இப்போது, பெண்ணடிமைத்தனத்தில் தனத்தில் ஊரித்திளைத்த பெண்ணின பெருச்சாளிகளும் அடக்கம் ஒடுக்கம் என இந்த தலைமுறைக்கும் ஓதிக் கொண்டிருக்கும் சில பெண்பேடிகளுமே இதற்கு முக்கிய காரணம்.

பெண்ணியம் இப்போதுதான் எட்டிப்பார்க்கிறது எட்டிப் பிடித்துவிடுவோம். பெண்ணடிமை சமூகத்தில் பல்வேறு தலைமுறைகளாக ஊறித்திளைத்தது இந்த இனம். உடனடி மாற்றம் கண்டுவிட முடியாது.

எத்துணை ஆண்டு கால பொறுமையாய் இருந்தோம் இன்னும் சில நாட்கள் பொறுத்தே ஆக வேண்டும்.விட்டுகொடுத்துதான் வெற்றி பெற வேண்டும். நான் மேலே குறிப்பிட்டவைகள் எல்லாம் நாமாக விரும்பி ஏற்று கொண்டோமானால் இல்லை நிச்சயமாக இல்லை அதுதான் நம் தலைவிதி என்று ஏற்றுக்கொண்டோம். அதற்காக இதெல்லாம் தவறு செய்யக்கூடாது என்பதில்லை... என்றாவது நம் பதின்ம வயது கனவுகளைப் பற்றி நினைந்ததுண்டா...??? கனவு என்ற உடனே புரட்சிப்பெண் புதுமைப்பெண் போன்ற வெற்று புலகாங்கித வார்த்தைகள் எல்லாம் நான் கூறவில்லை.

நாம் அறிந்து தெரிந்து கொண்ட அறிவுசார் விஷயங்கள் எங்கே .???  அளவாக பராமறித்த உடற்கட்டு எங்கே..??? அழகாய் செய்து கொண்ட அலங்காரம் எங்கே..??? என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற சின்ன சின்ன எண்ணம் கொண்டாயே அவையெல்லாம்  எங்கே...????

குடும்பச்சூழல், வருமானம், வறுமை இவெயெல்லாம் விட்டு விடுவோம். பொருளீட்டும் வாழ்க்கைதான் ஆனாலும் அந்த வாழ்வில் பெரும்பாலும் பெண்களின் கனவுகள் அழிக்கப்பட்டுதான்  பொருளாதார ஏற்றம் அடையப்படுகிறது என்பதே உண்மை.

இந்த சமூகத்தில் நம்மீது திணிக்கப்படும் ஒவ்வோரு கொடிய செயல்களுக்கும் நாம் போராடி வெற்றி காண முடியாது. இங்கே எல்லாப் பெண்களின் செயல்களையும் இந்த உலகம் போற்றிவிடாது. பொறுமையே நம் எண்ணங்களை செயல்படுத்துவதற்கான ஆயுதம்.

எதையும் வீட்டிலிருந்து தொடங்குவோம் என்பார்கள். திருமணமாகி ஈரைந்து ஆண்டுகள் ஆண்டுகள் ஆகிவிட்டால் என்ன..?? இரண்டு குழந்தைகள் பெற்று விட்டால் என்ன ...??? இது இடைவெளிதானே தவிர இறுதி அல்ல இரவில் இரண்டு நிமிடங்கள் ஒதுக்குங்கள். உங்களுக்குள் இருக்கும் அந்த தத்தி தவழ்ந்து நடக்க துடிக்கும் அந்த உங்களின் குழந்தையை கைப்பிடித்து வெளிக்கொண்டு வர முயலுங்கள். ஏதேனும் இழந்ததாக எண்ணியிருந்தால்  செயல்படுத்த தொடங்குங்கள்.

நம் முன்னேற்றத்திற்காக முயன்றால் மட்டும் போதாது.மாற்றுவழி தேட வேண்டும். அடுத்த வீட்டு பெண்களை போற்றும் சமூகம் அதனை நாம் செய்தால் புகழ்ந்துவிடாது. அவர்கள் புகழ்வார்கள் என்பதற்காக நாம் ஒரு விடயத்தை செய்யக்கூடாது. நம் குடும்பத்திற்காக விட்டு கொடுக்க கூடிய  சூழ்நிலை வரலாம். சில தியாகங்களை செய்யலாம் பரவாயில்லை. நம்  தனித்துவத்தை இழந்துவிடக்கூடாது. பெண்களுக்கு தம் தனித்துவத்தை இழப்பது பேரிழப்பு.

நமக்கென்று ஒர் கனவு இருந்திருக்கும் தற்போதும் இருக்கும் அதனை அப்படியே விட்டு விட வேண்டாம். அதற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குவோம்.

ஐம்பது வயதை கடந்த ஒர் பெண்மனி ஐந்து  இலட்சம் பேர் தன்னை பின்தொடர தன் ஆடல் திறமையை  சமூகவலைதளங்களில் பறைசாற்றுகிறார். முப்பத்தி ஆறு வயதுவரை வீட்டிலேயே முடங்கியிருந்த ஒர் பெண் சொந்தமாக தொழில் தொடங்கி சாதிக்கிறார் இவர்களே பெண்ணியவாதிகள். அவங்களுக்குள்ளே  இவ்வளவு திறமையா என வியக்கும்படி விண்ணைத் தொடுகிறார்கள். நமக்கும் விழிப்புணர்வாக அமைந்திருக்கிறார்கள். இவர்களைப் போலவே  நிறைய பெண்களை காணும்பொழுது நம் கனவுகளும் கைகெட்டும் உயரம்தான் என உற்சாகமடைய வைக்கிறது.

பொருளாதார பற்றாக்குறையின் காரணமாக பெரும்பாலான ஆண்கள் பெண்களை வேலைக்கு செல்ல தற்போது அனுமதிக்கின்றனர். அதுவல்ல வெற்றி விரும்பியதைச்செய்து வெற்றிப் பெறுவதே உண்மையான வெற்றி. முதலில் மறந்து விட்ட சின்ன சின்ன ஆசைகளை எல்லாம் நினைவுபடுத்துவோம். அதுவே உள்ளத்திலிருக்கும் உயர்ந்த எண்ணங்களை செயல்படுத்தவைக்கும். நட்புக்களை இழந்துவிட்டீர்கள் என்றால் புதுபித்துவிடுங்கள் புத்துணர்வு கிடைத்துவிடும். பெண்கள் இல்லாமல் இங்கே எந்த

விடயமும் முழுமை பெறாது கலாச்சாரத்தை பெண்கள் மற்றும் காப்பாற்ற வேண்டும் என்ற விதி உள்ளது. ஆம் நம் காலாச்சாரத்தின் முக்கிய அடையாளங்கள் குடும்பமும், கோவிலும். இவை இரண்டுமே பெண்களின்றி முழுமையாகாது.

மனதளவில் நாம் உறுதியானவர்கள் என்பதை மனதிற்கொள்வோம். உங்களுக்குள்ளாகவே ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். இன்றைய தலைமுறை ஆண்களில் நிறைய மாற்றங்கள் தென்படுகிறது. பெண்உரிமைகள் மீதான தடைக்கற்கள் தற்போது வீழ்த்தப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் பெண்கள் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிக்கும் சூழலும் உள்ளது. இவையனைத்திற்கும் பெண் சமூகத்தை ஓர் அங்கமாக நினைக்காமல் அடிமையாக நினைத்த தன் விளைவுதான் இவைகளெல்லாம்.

பெண்ணிய சிந்தனைகள் என்பது நம்மீது நமக்கே தெரியாமல் விதைக்கப்பட்டிருக்கும் விடயங்களையும் நம் விதி இதுதான் என்று நினைத்து ஏற்றுக்கொண்டிருக்கும் விடயங்களிலிருந்தும் நம்மை நாமே மீட்டெடுப்பது அழுகையை மறந்து ஆற்றலோடு செயல்படுவது. அனைவருக்கும் மரியாதை தரவேண்டும் எனக்கூறும் சமுதாயத்தில் நமக்கான சுயமரியாதையை நிலைநாட்டுவதே பெண்ணியம். பாசம் காதல்  உணர்ச்சிகள் போன்றவற்றின் மூலம் நம்மை யாரும் முடக்கிடவிடக்கூடாது என்பதே பெண்ணியம். பிள்ளைகளுக்கு சாப்பாட்டை கொடுத்துவிட்டு பட்டினியாய் இருப்பாள் தாயென்று நம்மை போற்றும் சமூகத்தில் எனக்கும் பசிக்கும் என்று உரைப்பதே அந்த தியாகிப் பட்டத்தால் என்னப் பயன் என்பதே பெண்ணியம்.

ஓர் ஆணின் ஆயிரம் யோசனைகளை விட ஒரு பெண்ணின் ஒருநிமிட கணிப்பு பெரிது. குடும்பத்தில் உள்ள அனைவரின் தேவைகளை யோசிக்கும் நாம் நம்மை பற்றியும் சுயபரிசோதனை செய்வோம். இழந்துவிட்ட சுயத்தை மீட்டெடுப்போம். மாற்ற முடியும் என மனதை ற்றுவோம். குடும்ப பொறுப்புகளை விட்டு நாம் வெளியே வருவதென்பது கூட கனவு தான். நாம் கனவிற்க்கும் இடம் ஒதுக்கினால் மற்றவையெல்லாம் நம் கையில்.

காலம் கடந்துவிடல்லை காலம் மாறியிருக்கிறது... மனமிருந்தால் மார்க்கமுண்டு... உன் குரலுக்கு நிச்சயம் இவ்வுலகம் செவி சாய்க்கும் கேளடி கண்மணி..!!

மாற்றத்தை நோக்கி பயணித்து கொண்டிருக்கும் ஒவ்வோர் மங்கையரின் மனப்பக்கங்களே இக்கட்டுரை.

--

சூர்யகலா சரவணன், B.E.,
கண்டிதம்பேட்டை.

# பச்சோந்தி நிறத்தின் பொன்முடி

நுரைத்ததும்பி பெயரும்
காலத்தின் நதியில்
கரையுடைந்து விரைகிறது
சுவையற்ற வாழ்வின் குப்பைகள்
பசித்த வயிற்றின் ஏக்கத்தோடு
வறண்டுகிடக்கும் நிலத்திடம்
விளைந்து தீர்க்க
எண்ணற்ற கண்ணீர்க் கதைகள்
கைவசமுள்ளன
சிறகுநொந்த பறவைகளை
இளைப்பாற்றும் முயற்சியில்
இற்று வீழ்ந்ததுபோக
மீதமுள்ள சுள்ளிகளோடு
ஆங்காங்கு தளிர்த்துள்ளன
பாலைநில மரங்கள்
தேய்வதும் வளர்வதுமான தோரணையில்
இருளின் தூய்மை சிதைக்கும்
நிலவின் முகத்தில்
கரியமேகத்தின் சாயம்
நிரந்தரமாய் அப்பிருக்கிறது
மங்கிய நிழலில் தலைசாயும்
நட்சத்திரம் ஒன்றின் இதயத்தில்
வானூர்தியின் இயந்திர ஒலி
பேரிடியை முழக்குகிறது
உறங்கும் சிறுத்தையின்
கனவினில் நுழைந்து
துயரங்களைப் போக்கிடும்
நரியொன்றின் வழியை
யாவரும் தொடர
பற்றியெரிகிறது மொத்தவனம்
கனல்பூக்களின் நேயத்தில் கருகி
சாம்பலான மொத்தத்தையும்
திரும்ப வடிவமைப்பதின் சிரமம்
தாகம் தீர்த்துத் திரும்பும்
காட்டின் மூலவர் கூட்டத்திற்குச்
செயற்கரிய செயலாகிறது
யாவற்றையும் கண்காணித்துத்
தன் நரைத்த தாடியை நீவி
அரியணையைத் தக்கவைப்பதின்
பயனுள்ள தியானத்தில்
இலயித்திருக்கிற அரிமாவின் தலையில்
கட்சிதமாய் பொருந்தியுள்ளது
பச்சோந்தி நிறத்தின் பொன்முடி.

## என்றும் நல்ல நாங்கள்!

நிறம் சுவை
திடமற்ற மொழியோடு
ஊர்ச்சுற்றும் பரிதாப இதயத்தைக்
கருணையோடு அணுகி
ஆதரிக்க ஆளில்லை
நெடுஞ்சாலையில்
பயணிகள் கடக்குமிடத்தின் அருகில்
தேசத்தின் மொத்த அழுக்கையும்
மேனியில் போர்த்தி
நெடுநாள் பட்டினியைக் கடக்க
கையேந்தி நிற்கையில்
முக்கால் நூற்றாண்டின் விடுதலை
பட்டொளிவீசி விண்ணை ஆள்கிறது.

வறுமையின் உச்சத்தில்
இல்லங்கள் யாவும்
மீளவழியற்ற இடிபாட்டில் நொறுங்க
பதவியை உறுதிசெய்யும்
வாக்குகளுக்காக
வள்ளலாகும் அரசர்
வாரிவழங்குவன யாவும் இலவசம்
வீடனைத்தும் துர்நாற்றம் வீசுகிறது
விலையேற்றத்தின் அழுகிய பண்டம்

இளைய விருட்சத்தின் கரங்களில்
இலட்சியத்தைப் பிடுங்கி
போதைவஸ்துகளைத் திணித்துச்
சமூக நீதியை வாய்கிழிய பேசுவதும்
கல்விக்கோவில்களைக்
குற்றங்கள் குடியிருக்கும்
சிறைச்சாலையாக்கி
நீதியை லட்சங்களில் விற்பதும்
நவீன ஆட்சியின் இராஜதந்திரம்

அநியாயம் செய்வது
ஆண்டவர் ஆனதால்
கண்ணிருந்தும் பார்க்காதே
காதிருந்தும் கேட்காதே
வாயிருந்தும் பேசாதே
கையிருந்தும் எழுதாதே
சூடு சுரணையற்றிரு
திட்டங்களைக் கொண்டாடு

வரிகளை வரங்களாய் போற்று
துயரங்களைச் சுமக்க பழகு
முடிந்தால் மறந்து விலகு
நேரமாகிறது வாருங்கள்
நீங்கள் வழங்கும்
கசப்பான இனிப்புகளுக்காக
குனிந்த தலையோடும்
கும்பிடும் கைகளோடும்
காத்திருக்கிறோம்
எவ்வளவு அடித்தாலும்
வலிக்காததைப்போல் வேடமிடும்
என்றும் இனிய நாங்கள்.

—

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.





மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# வ.உ.சி - ஜேம்ஸ் ஆலனின் எழுத்து நடையும் சொல்லாட்சியும்

முன்னுரை

முற்போக்கு இயக்கத்தின் முன்னோடியாய் பிற்போக்கை எதிர்த்து போர்க்கொடி பிடித்த உன்னதம் மிக்க மனிதனாய் விளங்கியவர் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை (வ.உ.சி). நாட்டையும், வீட்டையும் தமது இருகண்களாய் கருதியவர். இரட்டை ஆயுள் தண்டனையை ஏற்று உயிர் சுருங்கி உடல் மெலிந்தும் கூட தாய் நாட்டின் பெருமை காக்கத் தவறாதவர். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரானவர் ஜேம்ஸ் ஆலன். ஜேம்ஸ் ஆலன் நவீனத்துவத்தை முன்னிருத்தியே எழுதும் படைப்பாளர்.

பல்வேறு நூல்களை எழுதியவர். இவரின் எழுத்து நடை நுணுகி ஆராயத்தக்கது. இவரின் "AS A MAN THINKETH" என்னும் நூலை நாற்பதாண்டு கால சிறை தண்டனையில் சிலகாலத்தை இந்நூலுக்காகவே செலவிட்டார் வ.உ.சி. ஆங்கிலத்தில் இருந்த இந்நூலை தமிழில் "மனம் போல் வாழ்வு" என்று மொழிபெயர்த்தார். ஒழுகிய ஓசையையும் தெளிந்த நடையையும் கொண்ட ஒரே மொழிபெயர்ப்பு நூல் இதுவேயாகும். வ.உ.சியும், ஜேம்ஸ் ஆலனும் தனது சிந்தனையாளும், செயல்பாட்டாளும் உயர்ந்தவர்கள். அவர்களின் நடை புதிய உரைநடைக்கு வழிவகுக்கும் வல்லமை உடையது. இவ்விரு ஆளுமைகளின் எழுத்து நடை பற்றியும், எவ்வித சொல்லாடல்களை பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் இக்கட்டுரையில் விளங்கக் காண்போம்.

வ.உ.சியும் மனம் போல் வாழ்வும்

வ.உ.சி. தனது வாழ்நாட்களை விடுதலைக்காகவும், அற்புதப் படைப்புகளுக்காகவும் செலவிட்டவர். சுதேசிக் கப்பல் விட்டதற்காகவும் சுப்பிரமணிய சிவாவுடன் நட்பு உறவு கொண்டதற்காகவும் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது ஆங்கில அரசு. அன்றைய வைஸ்ராயாக இருந்த மன்றோ பிரபு இத்தண்டனையை வழங்கினார். கொடூர ஆங்கில அரசு செய்த இச்செயல் கண்டு துடித்தனர் வ.உ.சியின் தோழர்கள். வ.உ.சிக்கு இப்படிப்பட்ட தண்டனை வழங்கியதைக் கண்டு இங்கிலாந்தில் இந்திய அமைச்சராயிருந்த மார்லி பிரபு ஒரு கடிதம் எழுதினார்.

தூத்துக்குடி மனிதர்களுக்கு அளித்திருக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ள முடியாது. அடுத்த தபாலில் தீர்ப்பு எனக்கும் கிடைக்கும். இத்தகைய முட்டாள் தனமான தீர்ப்பை நான் ஆதரிக்க முடியாது. இத்தகைய முட்டாள் தனங்களையும் தவறுகளையும் திருத்துவதற்கு

முயற்சி செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டியது தான், ஆனால் குற்றத்திற்கு மிக அதிகமான தண்டனையால் அமைதியும் ஒழுங்கும் நிலைப்பதற்குப் பதில் நமது நீதித் துறையிலேயே மக்களுக்கு நம்பிக்கை போய்விடும். (பக்.24) வ.உ.சி.முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, நா.வானமாமலை.

என்று கடிதம் எழுதி ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தார் மார்லி பிரபு. இப்படியே சிறையில் காலம் பல கழிய ஆரம்பித்தது. வ.உ.சி தனது அறிவை பெருக்கிக் கொள்ளும் வகையில் பல நூல்களைக் கற்றார். அப்படிக் கற்ற நூல்தான் அறிஞர் ஜேம்ஸ் ஆலன் ஆங்கிலத்தில் எழுதிய *As a man thinketh* எனும் நூல். இன்னூலை படித்து விட்டு வ.உ.சி பல இரவுகளை கடக்க முடியாமல் தவித்த நாட்களை இன்றும் திருநெல்வேலி சிறைச்சாலை சொல்லிக் கொண்டிருக்கிறது. வ.உ.சியின் மனம் போல் வாழ்வு எனும் நூலை சிறைச்சாலையில் இருந்துகொண்டே மொழிபெயர்க்கத் தொடங்கினார். இவர் இந்நூலை மொழிபெயர்க்க உதவியவர் வ.உ.சியின் சிறைக்காவலர் என முதல் பதிப்பின் முன்னுரையில் வ.உ.சி கூறியுள்ளார்.

இவ்விடம் சென்ரல் ஜெயில் சூப்பென்டென்ட் மிஸ்டர்.இ.எச்.காஸ்டென் துரையவர்கள் நான் இந்நூலை மொழி பெயர்ப்பதர்க்குத் தம்மால் இயன்ற எல்லா சௌகரியங்களையும் செய்து தந்தமையின் நான் அன்னார்க்கு மிகவும் நன்றியறிதல் உள்ளவனாயிருக்கிறேன். (பக்.11) மனம் போல் வாழ்வு, வ.உ.சிதம்பரம் பிள்ளை.

இவரின் மொழிபெயர்ப்பு நடையே மிகவும் போற்றக் கூடியது. மொழிபெயர்ப்பை பலவகையாகப் பகுக்களாம் அதில் ஒன்று எழுத்துப் பெயர்ப்பு, ஒலிபெயர்ப்பாகும். பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளர்கள் இவ்விரு தன்மையில் மொழிபெயர்ப்பவர்கள் ஆவர். ஆனால் வ.உ.சி ஜேம்ஸ் ஆலன் குறிப்பிட்டதை அப்படியே தமிழில் மொழிபெயர்த்ததோடு மட்டுமல்லாது துள்ளியமாக மொழிபெயர்த்திருப்பதில் இருந்தே ஆங்கிலத்தில் வ.உ.சி. எந்த அளவுக்கு புலமை வாய்ந்தவர் என்பதை நன்கு உணரமுடிகிறது.
வ.உ.சி - ஜேம்ஸ் ஆலன் எழுத்து நடை சொல்லாட்சி
மனம் போல் வாழ்வு ஒரு மொழிபெயர்ப்பு என்றாலும் அதில் உள்ள கருத்துக்களும் நீதிகளும் சிறைவாசிகளுக்கு மட்டுமன்றி மானுட முழுமைக்கும் பயன்படும் வகையில் பயன்படுத்தியுள்ளர் வ.உ.சி. ஜேம்ஸ் ஆலன் ஆங்கிலத்தில் பயன்படுத்திய வார்த்தைகளை தமிழில் வ.உ.சி கையாளும் விதமே படிப்போரை இன்பமுறச் செய்கிறது. இதில் இருவரின் படைப்பாளுமைத் தன்மையை காணமுடிகிறது. ஜேம்ஸ் ஆலன் அவர்கள்

ஆங்கிலத்தில்

"*what we are by thought we wrought and built. If a man's mind hath evil thoughts pain comes on him as comes*

*the wheel the ox behind".... (page,4)*
என்று கூறுகிறார்.

அதை வ.உ.சி தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். அம்மொழிபெயர்ப்பில் வ.உ.சி புதிய சொற்களைக் கையாண்டுள்ளார். நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு ஒரு நல்லது நடக்கும் நாம் ஒருவருக்கு தீமை செய்தால் நமக்கு ஒரு தீமை நடக்கும் என்பதை நினைப்பால் நாம் நம் நிலைமையை உற்றனம்,

ஒருவன் நினைப்புக் கருமறம் பற்றிடின்
எருதுபின் உருளைபோல் வரும்நனி துன்பமே
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்னிழல் பொல மன்னும் இன்பமே. (பக்.19)

இப்பாடலின் மூலம் விளக்குகிறார். இதில் அவர் கையாண்டுள்ள எழுத்துநடை ஒழுகிய ஆற்றொழுக்கான நடை. அவரின் சொல்லாட்சியை கண்டு வியந்து போவார்கள் வ.உ.சி யைப் படித்தவர்கள். நம் நினைப்பு அறமான சிந்தை உடையதாய் இருத்தல் வேண்டும். இல்லையேல் எருது பின்னே கல் உருளையைக் கட்டினால் அக்கல்லை இழுக்க வலுவில்லாமல் எருது கத்துமோ அதைப்போல் நம் நிலையும் என்ற மாபெரும் உண்மையை பதிவு செய்கிறார் வ.உ.சி. கருமறம் (துன்பம்) என்ற புதிய சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். மனித மனம் பயிர் செய்து அறுவடை செய்யக்கூடியது அல்ல அது நிரந்தரமாய் நிலைத்திருக்கும் காடு என்கிறார் ஜேம்ஸ் ஆலன். அதையே முன்மொழிகிறார் வ.உ.சி.

வ.உ.சி ஏழு உட்தலைப்பில் இந்நூலை மொழிபெயர்த்துள்ளார். ஒவ்வொரு தலைப்பின் நடுவிலோ கடைசியிலோ ஒரு சில பாடல்களைப் பதிவு செய்துள்ளார். அந்தப் பாடல்கள் அற இலக்கியங்களில் எப்படி இருக்கிறதோ அதுபோலவே அமைத்துள்ளார். கல்வியின் மேன்மையை குறளில் வள்ளுவர் இப்படிக் கூறுவார்

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின். ( குறள் : கடவுள் வாழ்த்து - 2 )

ஆனால் வ.உ.சி இரண்டடி மேல் மீதமொரு இரண்டடியைச் சேர்த்து இப்படிக் கூறுகிறார்.

அறவி னைக்கும் அரும்பொருள் இன்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
வுறலி னுக்கும் நல்வீரம் தனக்கும்ஒண்
துறவி னுக்கும் துணைமனம் என்பவே. (பக்.34)

என்று அறத்தையும் அவ்வறம் எப்படி கிடைக்கும் என்பதையும் அழகாய் பதிவு செய்துள்ளார் வ.உ.சி. இங்கு அவரின் எழுத்து நடையும் சொல் நயமும் ஆராயத்தக்கது. உறலினுக்கும் என்ற சொல்லை "வுறலி னுக்கும்" என சீர்பிரித்த விதமும் கருத்தும் ஆழமும் மிக்கது. வ.உ.சி பல இடங்களில் எழுத்து நடையையும் சொல்லட்சியையும் சிறப்பாகவே கையாண்டுள்ளார்.

மனம் போல் வாழ்வு நூலில் வ.உ.சி குறிப்பிடும் கருத்துக்கள் :

நாம் தினந்தோறும் காண்கின்ற மனிதரில் எத்தனை பேர் தமது அருமையான உயிர்களை வருத்துகின்றனர். எத்தனை பேர் கடுகடுத்த முகமும் வெடுவெடுத்த பேச்சும் கொண்டு இனிமையையும் அழகையும் கெடுக்கின்றனர். எத்தனை பேர் சமாதானத்தை அழித்து பகைமையை ஆக்குகின்றனர். எத்தனை பேர் நிதானமான ஒழுக்கத்தை விடுத்து நீங்காத துன்பத்தை அடைகின்றனர். இதனை விடுத்து வாழ்தல் வேண்டும் என்கிறார் வ.உ.சி.

எந்த சூழ்நிலை வந்தாலும் அதனை எதிர் கொள்ள தயாராக இருத்தல் வேண்டும். வாழ்க்கை சமுத்திரம் போன்றது. அதிலே விழுந்து விட்டொமென்று கவலை கொள்வதை விட அதிலே சிரித்துக் கொண்டிருக்கும் சிறு தீவுகளாக நாமிருந்தால் வாழ்வில் நமக்கு துன்பம் இல்லை என்ற கருத்துத் தெளிவை மனம் போல் வாழ்வு என்ற நூல் நமக்கு எடுத்துரைக்கிறது.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னை
தலையாகச் செய்வானும் தான். (பக்.21)

என்ற நன்னெறிகளைக் கூறுகிறது மனம் போல் வாழ்வு எனும் இந்நூல். சிறையில் இருந்த கைதிகளுக்கு மட்டுமல்லாது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் தேவையான ஒன்றான நூலாய் இது விளங்குகிறது.

முடிவுரை

அறங்கள் ஓங்கவும் நினைவுகளில் நற்சிந்தனையே பெருகவும் மனிதன் மனிதனாக உணர் ந்துகொள்ளவும் பயன்படுவது சிறந்த நூல்கள் ஆகும். அந்நூல்களை திறம்படக் கற்று நீதிகளை நீதியாகக் கற்பித்த உத்தமர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. அவர் மொழிபெயர் த்த நூல்கள் ஏராளம், இருப்பினும் சிறையில் இருந்து கொண்டே மொழிபெயர் த்த மனம் போல் வாழ்வு என்ற நூாலில் அறக்கருத்துக்கள் தராளம். அறிஞர் ஜேம்ஸ் ஆலன் எழுத்து நடையும் எழுத்தாளர் வ.உ.சி-யின் எழுத்து நடையும் ஒழுகிய தன்மையுடையதாய் அமைந்துள்ளன. இருப்பினும் சொல்லாட்சி என்று வருகிறபோது ஜேம்ஸ் ஆலனை

காட்டிலும் வ.உ.சி-யின் சொல்லாட்சி வலுமிக்கதும் கருத்தாழம் மிக்கதுமாய் அமைந்துள்ளது. சிறைக்கைதிகளுக்கு மட்டுமல்லாது இயற்கையால் படைக்கப்பட்ட இப்புவியில் வாழும் அனைவருக்கும் பயன்படும் வகையில் ஜேம்ஸ் ஆலன் அவர்கள் இந்நூலினை ஆங்கிலத்தில் படைத்தார். அதை தமிழ்மொழியில் மனம்போல் வாழ்வு என வ.உ.சி மொழிபெயர் த்தார். இந்நூலின் வழியில் ஜேம்ஸ் ஆலன் - வ.உ.சி இவர்களின் எழுத்து நடையையும் சொல்லாட்சியையும் ஒப்புநோக்கும் போது ஜேம்ஸ் ஆலனை விட வ.உ.சி-யின் எழுத்து நடையும் சொல்லாட்சியும் சிறப்புற்று விளங்குகிறது என்பதை இக்கட்டுரை தெளிவுபட எடுத்துரைக்கிறது.

துணை நூற்பட்டியல்:

1. சிதம்பரம் பிள்ளை .வ.உ
மனம் போல் வாழ்வு (2021)
வ.உ.சி. நூலகம், லாயிட்ஸ் குடியிருப்பு, இராயப்பேட்டை, சென்னை - 014

2. வானமாமலை .நா
வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி (ஜனவரி 2022),
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர் சென்னை - 050.

3. புலியூர் கேசிகன்
திருக்குறள் புதிய உரை, (2009)
பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108.

4. James Allen
As a man thinketh. (English)

சான்றென் விளக்கம் :
1. மனம் போல் வாழ்வு - வ.உ.சிதம்பரம் பிள்ளை, பக்கம், 11,19,21,34.
2. வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி - பேராசிரியர் நா. வானமாமலை, பக்கம், 24.
3. As a man as thinketh - james allen, page, 4.

—

ச. வாசுதேவன்,
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு,
இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைகழகம். தஞ்சாவூர் - 613 010
shankarvasu98@gmail.com

# இரைகள்

விசுவரூப பிள்ளையார்
வாங்கி வைக்க
விடலைப் பிள்ளைகள்
வீடெங்கும்...
வீதியெங்கும்...
முச்சந்தியெங்கும்...
நெடுஞ்சாலை வேகத்தடைகளெங்கும்...
தடாலடித் தண்டல்காரன்களாக
திடீர் உண்டியல் குலுக்கிக்
கொண்டிருக்கிறார்கள்...

வடக்குத் தெரு
தெற்குத் தெரு
மேலத்தெரு
கேடு விளைவிக்கும்
சீனா களிமண்
பிள்ளையாரைவிட
ஒரு விறற்கடையாவது விஞ்சி இருக்க
வேண்டுமென்பது கீழத்தெரு பசங்களின்
பேரவா.

ஒரு ரசிக கொண்டாட்ட மனநிலையில்
பிள்ளையாருடன்
நாளும் மற்றுமொரு நாளாக
ஊதுவத்தி சூடம் மணக்க
ஊ சொல்றியா ஊஊஹூ சொல்றியா
காதைப் பிளக்க
முகம் சுளித்து ஏசும்
அக்கா அம்மா ஆத்தா வயதொத்த
பெண்களிடையே கிராமத்து
நாயகர்களாக
பிள்ளையார் குடிலுக்குள்
பாண்டைகளாகக் கிடந்த
சிறுசுகளில் சிலரிடமிருந்து வீசும்
சரக்கும் சிகரெட்டும் கொஞ்சம்
கஞ்சாவும்!

கரைபுரண்டு ஓடும்
ஆற்றில் கரைக்கும் நாளன்று
ஆட்டம் பாட்டம் குதியாட்டத்துடன்
பீர் பாட்டில் துணையோடு
பீ மூத்திர நெடியோடு
தெருவில் உறைந்து போய் உம்மணாம்
மூஞ்சியுடன்
பரிதாப பிள்ளையார்!

கடைசியாக
ஊரே ஏறி மிதித்ததில்
மாசுடைத்த மாவுப் பிள்ளையார்
ஓடும் தண்ணீரோடு
ஆளவிடுங்கடா சாமியென்று
கும்பியாகிப் போக...

இன்னும் அடங்காத
கூத்தாட்டு வெறியாட்டத்திற்கிடையில்
அடையாளம் தெரியாத
வாகனத்தின் வேகப்பசிக்கு இரையாகித்
தெறித்தான்
இரத்தமும் சதையுமாக
ஐந்தாம் வகுப்பு அப்பாவி ஹரீஷ்!

—

அமுதாராம்,
மன்னார்குடி.

# துளிப்பாக்கள்

*01)*

*உடையும் கற்கள்*
*உயிர்பெறுகிறது*
*சிலைகளாய்...*

*தாவுகின்ற முயல்*
*ஓ! படம் பிடிக்கிறதே*
*வரைந்த ஓவியத்தில்...*

*விரிந்த வானம்*
*கருப்புசாயம் பூசுகிறது*
*நனையும் விவசாயி*

*இறுதி நடனம்*
*ஆட்டுவிக்கும் காற்று*
*அணையும் மெழுகின் ஒளி*

*வறண்ட வீட்டில்*
*வரிவரியாய் கோடுகள்*
*வடிந்த குளம்*

*காய்கிறதுமொட்டை மாடியில்*
*நனைந்ததுணியும்*
*காகத்தின் பசியும்*

*வானைத் தொடுகிறேன்*
*எனக்கும் முளைக்கிறது*
*சிறகுகள் ஓவியத்தில்..*

*படபடக்கும் கண்ணாடி*
*துடிக்கிறது சிறகடிக்கும்*
*பட்டாம்பூச்சி*

*கத்தும் குயில்*
*உதிரும் இலைகள்*
*கோடை காலம்*

*பட்டியில் அடங்கிய ஆடு*
*உதிர்ந்த இருள்*
*விடியாத பகல்*

*2)*

*நிம்மதி*

*நெஞ்சுக்குள் வரிகள் நீந்த*
*கணத்த சுமையில்*
*எழுதி வைக்கிறான்*
*ஆலயத்தில் அமைதியாய்...!*

*பசியால் சுருளும்*
*வயோதிகனின் கையில்*
*விழுகிறது காய்ந்த*
*ரொட்டித் துண்டு பசி*
*தீர்ந்ததா....?*

*கூடையில் நிறையும் பூக்கள்*
*காற்றில் வழிந்தோடி*
*குட்டையில் அமிழ்கிறதே*
*வீசும் மணங்கள்*
*நின்று போனதே...!*

*உதைக்கும் குழந்தை*
*மிதக்கிறது வயிற்றில்*
*தவம் கிடக்கிறது*
*தாயின் மடி மட்டும்*
*பூத்ததா?*

*அள்ளி வாரியெடுத்து*
*இடுப்பேறிய வேட்டியும்*
*நனைந்திருக்கிறது*

வெற்றுடம்பாய் கால்பதித்த
விவசாயியின் கழனி மட்டும்
காய்ந்திருக்கிறது பசியோடு..!

மனதில் புதைத்து வைத்த
நினைவுகளை கிள்ளி
எடுக்கும்பொழுது முட்களாய்
தைக்கிறது பொழுதுகள்

உடலை மறைத்த ஆடை
அங்கங்கே ஜன்னலாய்
வாய் பிளக்கிறது
ஜன்னலை மூடும் முன்
முளைக்கிறது மீண்டுமொரு
ஜன்னல்...!

பிளாட்பாரங்களில்
முளைத்த வீடுகள்
தூக்கி வீசப்படுகின்றன
ஓயாத மழையில்...!

பத்து மாதம்
உறங்கிய குழந்தை
கண்விழித்து அழுகிறதே
மீண்டும் பத்து மாதம்
வேண்டுமென்கிறதோ....!

மனதுக்குள் பதுங்கிய
நிம்மதியை தட்டி யெழுப்பு
நாளெல்லாம் நாமெல்லாம்
நிம்மதியை சந்திக்கலாம்...!
சந்திக்கலாம் சாதிக்கலாம்...!

3)
தமிழென்றுசொல்

அலையாய் பனிமலையாய்
புது நிலவாய் நீ வருவாய்
திருவாய் நீ திறவாய்
புதுப்பொலிவாய் அதை நீ
வெளிக் கொணர்வாய்

அழகழகாய் பேசிடுவாய்
மென்னடையில் சென்றிடுவாய்
குறுநகையை புனைந்திடுவாய்
மெல்லிசையால் எனை நீ
மீட்டிடுவாய்

கல்லாகி மண்ணாகி
கார்முகிலின் உருவாகி
சொல்லாகி பொருளாகி
தமிழ்மொழியின் உயிராகி
வண்டாகி எனையருந்தும்
பொன்நிற பூங்குயிலே...!

மலைமீது மடிசாய்ந்த
வெண்மேக கூட்டத்தில்
உன்திரு முகத்தை
மறைத்து வைத்தாய்
யார் வந்து திறந்திடுவார்
வெண்மேகம் கலைத்திடுவார்

சொல்லெடுத்து மைநிரப்பி
காகிதத்தின்வெற்றிடத்தில்
அப்பிவைத்தேன்கிறுக்கல்களை
வரிகள் மணந்து பூக்கிறதே

வருவாய் நீ கவிநிலவாய்
செந்தமிழை உரைத்திடுவாய்
அழகிய உயிரொளியில்
இருள் வானில்ஒளிர்விடுவாய்

சிலையென்று தொடவந்தேன்
காற்றோடு கரைந்தாயே
மின்னி மின்னி வெட்டியே
என்கனவை கலைத்து
சென்றாயே...!

உச்சரிக்கும் வார்த்தைகளும்
உயிர்ப்பின்றி வீழ்ந்திருக்க
செம்மொழியின் சுவாசத்தில்
நடைபயிலும் முதுமொழியே
பிறவாய் புதுநடையாய்...

கண்ணென்றேன்
கார்முகில் நிறமென்றேன்
பொன்னென்றேன் தேன்சிந்தும்
பூவென்றேன்
யாழென்றேன்
எனை மீட்டும் பாவென்றேன்
நான் புனையும் பாக்களில்
விழும் மாலையென்றேன்
காலையென்றேன்
ஒளிரும் ஞாயிற்றில்
சுடரென்றேன்
எண்ணென்பேன் நீயே
எனை பயிற்றுவிக்கும்
என்னுயிர் தமிழென்பேன்

தமிழ் தமிழ் தமிழ்
தரணியைவெல்லும் தமிழ்
தமிழனின்உயிர் தமிழ்
தமிழென்று சொல்
தலைநிமிரும் உன்னால்
ஒரு சொல்.... !

4)
துளிப்பாக்கள்

கண்ணத்தை இன்னமும்
தொடுகிறேன் அம்மாவின்
அன்பு முத்தம்

மழை நின்று விட்டது
ஆனால் ஓயவில்லை
தவளையின் சத்தம்

இருளுக்குள் தேடுகிறது
சுடரிடும் ஒளி
கையில் மெழுகுவர்த்தி

ஓயாமல் விழுகிறது
ஒரே பாடல்
கைப்பேசி ரிங்டோன்

நீளும் சாலையில்
நீங்கா நினைவுகளோடு
லயிக்கும் பேருந்து பயணம்

வானம் அழும்போது மட்டும்
சிரிக்கும் விவசாயி
உழுத நிலத்தில்

தொலைகிறது நிரம்பிய கவலை
மெல்லிசைப்பாடல்
உள்நுழையும் போது

5)
மௌனம்

நீ
சேர்த்து வைத்த
மௌனத்தை செலவிடாமல்
புதைக்கிறதே மனம்...!

யாரிடம் கேட்பதோ
அடித்தாலும் வலியோடு
வாய்திறக்காமல்
காக்கிறாயே...!

மெல்ல மெல்ல நகர்ந்து வந்து
காதோரம் கிசுகிசுத்தாலும்
ஜடமாய் நிற்கிறாய்
எங்கிருந்து பெற்றாய்
இந்த அற்புதத்தை..?

பெண்ணின் இதழ் மீதமர்ந்து
முத்தமிட்டாயோ
அதனால் தான் வார்த்தையின்றி
தவிக்கிறாயோ?

இரவின் கால்களில்
உன் கொலுசல்லவா
ஒலிக்கிறது
எத்தனை ஜாலங்கள்
காட்டிவிட்டு செல்கிறாய்?

சம்மதம் என்பது கூட
உன்னிடமிருந்து தான்
கற்பார்கள் போல
எவ்வளவு அழகாக
தலைசாய்க்கிறாய்...!

எத்தனை கிழிசல்கள்
விழுந்தாலும் ஆடையும்
மௌனம் தான் காக்கிறதே
நூலால் தைக்கும் வரை..!

தியானிக்கும் போது தான்
நீயும் ஞானியாகிறாய்

உன்னை சூடாத மனங்கள்
சில நேரங்களில்
மோதிக்கொள்கின்றன.

ஆயிரம் வார்த்தைகளை
எழுப்பி உரையாட
நிற்கும்போது தான்
புரிகிறது நீ எவ்வளவு
அர்த்தமாகிறாய் என்று...!

சில நேரங்களில்
உன்னைப்போல வாழ
நானும் கற்கிறேன்
மௌனமான வார்த்தைகளை...!

மௌனமான நேரத்தில்
மௌனங்களெல்லாம்
விளையாடி மகிழ்வதை
என் மனம் இப்போதும்
மௌனமாய் கேட்கிறது.

மௌனத்தின் விழிகளை
பிடுங்கினேன்
சுயமாய் உருவெடுக்கிறது
இன்னொரு மௌனம்
என்னுள்...!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# செங்கல் சூளை

ஓர் அழகிய கிராமம், அரசினர் இடைநிலை பள்ளி. பள்ளிக்கூட மணி ஒலித்ததும் மாணவர்கள் அவரவர்களுடைய வகுப்புக்குள் ஓடினர். வகுப்பு ஆசிரியை வருகை பதிவேட்டுடன் வகுப்புக்குள் நுழைய, அணைத்து குழந்தைகளும் எழுந்து நின்று "வணக்கம் டீச்சர்" என்றனர், மலர்ந்த முகத்துடன் கவிதா டீச்சர் அனைவருக்கும் காலை வணக்கம் என்று கூறி உட்காரச்சொல்லி கையை அசைக்க அனைவரும் உட்கார்ந்தனர்,

கவிதா டீச்சர் தன் வருகை பதிவேட்டை எடுத்து குழந்தைகளின் வருகையை பதிவு செய்ய ஆரம்பித்தார், அன்பழகன்,"உள்ளேன் அம்மா", ஆவுடையன் "உள்ளேன் அம்மா" என்று ஆரம்பித்தார், அப்படி ஒவ்வொரு மாணவனின் பெயரை அழைத்து வருகையை பதிவு செய்து கொண்டிருந்த பொழுது மாரியம்மாள், மாரியம்மாள் என்று கேட்க "வரலீங்க டீச்சர்" என்றதும், "ஏன் மாரியம்மா ரொம்ப நாளாவே வரல?" என்று கேட்டார், அங்கிருந்த சிறுவன் எழுந்து "மாரியம்மா இனி பள்ளிக்கூடம் வராது டீச்சர், அது சூளைக்கு வேலைக்கு போகுது" என்று கூறினான்.

"ஏன் என்ன ஆச்சு அவங்க அம்மா தான் வேலைக்கு போறாங்களே?" என்று டீச்சர் கேட்க, "ஆமாம் டீச்சர்  ஆனா அவங்க அம்மா கட்டட வேலை பாக்குறப்ப கல்லு சறுக்கி விழுந்து அவங்க இடுப்பு ஒடஞ்சு படுக்கையில கெடக்குறாங்கன்னு எங்க அம்மா சொல்லிச்சு" என்றான், ஓ என்று மட்டும் சொல்லி கவிதா டீச்சர் வருகை பதிவை முடித்து பாடத்தை எடுக்க ஆரம்பித்தார்....

மாலையில் பள்ளி முடிந்து அனைவரும் வீடு  திரும்ப, கவிதா டீச்சர் மட்டும் செங்கல் சூளை இருக்கும் திசை நோக்கி நடந்தார், சூளை வந்ததும் அங்கு ஒருநோட்டில் எதையோ எழுதி கணக்கு பார்த்தபடி அமர்ந்து இருந்தார் சூளையின் முதலாளி "கறுப்பன்". வணக்கம் என்று கவிதா சொன்னதும் கறுப்பன் "அடடே நம்ம டீச்சரா வாங்க வாங்க" என்று வரவேற்றார். ஆமாம் என்றவாறு அங்கிருந்த ஒரு நாற்காலியை துடைத்துவிட்டு உட்கார்ந்தார் கவிதா. "சொல்லுங்க டீச்சர் என்ன விஷயம் இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க" என்று கறுப்பன் கேட்டபடியே "டேய் முத்து டீச்சருக்கு ஒரு காபி கொண்டு வாடா" என்று சொல்ல, "அதெல்லாம் வேண்டாம் என்று தடுத்தார் டீச்சர்.

கவிதா டீச்சர் என்று கேட்டதும் அங்கு வேலை செய்யும் மாரியம்மாளுக்கு ஒரே ஆனந்தம், "டீச்சர் வந்துருகங்களா" என்று ஆவலுடன் திரும்ப அருகில் இருப்பவர் வேண்டாம் என்பது போல் கண் அசைத்ததும் அதை புரிந்துகொண்ட மாரி மீண்டும் தன் வேலையை பார்க்க துவங்கினாள்.

கவிதா டீச்சர் சற்று தயங்கியவாரு "ஒரு முக்கியமான விஷயத்துக்காகத்தான் உங்கள பாக்க வந்தேன்" என்றதும், ஏதோ யோசனையுடனேயே கருப்பன் "சொல்லுங்க டீச்சர்" என்று கேட்கலானான்."உங்க சூளைல வேலை பாக்குற மாரியம்மா பத்திதான் பேச வந்தேன்" என்று கவிதா டீச்சர் பேச ஆரம்பிக்க கறுப்பன் புரிந்து கொண்டான். உடனே "ஏ மாரி இங்க வா புள்ள" என்று மாரியம்மாளை அழைக்க, மாரியம்மாள் ஓடிவந்தாள், வந்தவள் டீச்சரை பார்த்து "நல்ல இருக்கீங்களா டீச்சர்?" என்று புன்முறுவலிட, கவிதா சிரித்தபடி "ம்ம்ம்" என்று தலையசைத்தார்,

"மாரியம்மா இங்க தான் வேலைபாக்குது, அவங்க அம்மா அடிபட்டு படுத்த படுக்கை ஆயிட்டா, தம்பி ஒருத்தன், இவங்க குடும்பத்துக்கு இந்த வேலையால தான் காவயிறு கஞ்சியாவது கெடக்கிது" என்று கறுப்பன் முடிக்க, கவிதா டீச்சர் " மாரி நல்லா படிக்குற பொண்ணு அவ படிப்பு பாதியில நிக்குறது எனக்கு வருத்தமா இருக்கு, வேணும்னா மரியோட படிப்பு செலவ நானே ஏத்துக்கலாம்னு கேக்க வந்தேன்" என்று பட்டென்று சொல்லி விட, கறுப்பன் சற்று இறுக்கமாக "மாரிக்கு படிப்பை குடுப்பீங்க, அவங்க குடுபத்துக்கு சோறு யாரு போடுவாங்க டீச்சர்?" என்று கேட்டதும்...

என்ன இருந்தாலும் குழந்தைகளை வேளைக்கு வைக்குறது தப்புங்க" என்று சொன்னார் கவிதா டீச்சர், அதற்கு கறுப்பன் "எனக்கு ஒன்னும் இல்லிங்க இந்த சின்ன பொண்ணு இடத்துக்கு ஒரு ஆளை போட்ட எனக்கு வேலை சீக்கரம் முடியும், என்ன கூலி நூறு ரூவா தான அதிகம்" என்றதும், "என்ன தான் நீங்க காரணம் சொன்னாலும்..." என்று கவிதா பேசிக்கொண்டிருக்கும் பொழுது "டீச்சர்" என்று தடுத்தவாறு மாரி கையெடுத்து கும்பிட கவிதாவினால் மேலே ஏதும் பேச முடியவில்லை. கறுப்பன் நீ போ என்றவாறு மாரியை பார்த்து கண் அசைக்க அவள் அங்கிருந்து நகர்ந்தாள்...

சரிங்க நானும் கிளம்புறேன்" என்று கவிதா நகர முற்பட்டாள், பின்னிருந்து ஒரு குரல் கேட்கவும் திரும்பி பார்த்தார் கவிதா டீச்சர். மாரியம்மாள் "டீச்சர் டீச்சர்" என்றவாறு ஓடி வரவும், "என்ன மாரி எதுவானாலும் சொல்லு என்று கவிதா ஆர்வமாக கேட்கவும், "டீச்சர் என்ன எங்க அப்பா தான் பள்ளிக்என்த்துல சேத்து விட்டாங்க, அவரு இறந்து போன அப்புறம் எங்களுக்கு உதவிக்கு கூட யாரும் இல்ல, அம்மாவுக்கும் இப்படி ஆயிட்டு, என்னால தான் படிக்க முடியல என் தம்பியாவது படிக்கணும் டீச்சர், அவனுக்கு ஆறு வயசு முடிய போகுது, பள்ளிக்கூடத்துல எப்படி சேக்குறதுன்னு தெரியல, நீங்க எனக்கு இந்த உதவிய மட்டும் பண்ணுங்க, நானே என் தம்பிய படிக்க வெச்சுடுவேன்" என்று கேட்டாள் மாரி, கவிதா டீச்சர் மனம் நெகிழ்ந்தவாறு "கண்டிப்பா உன் தம்பிய பள்ளிக்கூடத்துல சேத்துவிட உதவி பண்றேன், ஆனா உனக்கு பள்ளிக்கூடம் போக ஆசை இல்லையா?" என்று கேட்க, "ஆச தான், ஆனா..... அதான் என் தம்பி படிக்க போறானே எனக்கு அது போதும் டீச்சர்" என்று மாரி மகிழ்ந்தவாரே சொன்னாள். மாரியின் பேச்சை கேட்டு கனத்த

மனதுடன் வீடு திருப்பினார் கவிதா டீச்சர்.

மாரி செங்கற்களை சூளைக்குள் போட்டு வேக வைக்க தொடங்கினாள், அங்கு வெந்துகொண்டிருப்பது செங்கற்கள் மட்டும் அல்ல மாரியின் கனவு ஆசை மற்றும் மாரி போன்று வறுமையால் வேலைக்கு செல்லும் குழந்தைகளின் எதிர்காலமும் தான்.

குழந்தை தொழிலாளர்கள் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள், எவ்வளவோ சட்டங்கள் இருந்தும் பல குழந்தைகள் குடும்ப சூழ்நிலையால் வேலைக்குச் செல்கின்றனர், கவிதா டீச்சரால் மாரியை படிக்க வைக்க முடியா விட்டாலும் அவள் தம்பியை படிக்க வைக்க உதவி செய்வது போல நம்மால் முடிந்தவரை இவர்களைப் போன்ற குழந்தைகளுக்கு உதவுவோம்

—

ரம்யா தங்கதுரை.

---



**இ. ஹரித்ரா,**
9 ஆம் வகுப்பு,
தரணி வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி,
மன்னார்குடி.

# உலகில் முதல் நாள்

தாயின் கருவறையிலிருந்து
வெளிவந்த நாள்!

அவளின்
வயிற்றைக் கிழித்து
பிறந்து
வானை உதைத்த நாள்!

அவளோடு
தொப்புள்கொடி அறுந்ததால்
என்னவோ!
அழுதே பிறந்தநாள்...
அவளின்
இரத்த ஆடை சூடி
உலகில் வெளிவந்த நாள்!

வயிற்றிலிருந்து
அவளின் இதயத்தில்
முழுவதுமாக
இடம்பிடித்த நாள்!

அவளின்
அருகினில் படுத்து
அகிலமே இதுவென
நினைத்த நாள்!

பத்து மாத
தவம் முடிந்து
வெளிவந்து
உண்மைக் கடவுளைக்
கண்ட நாள்!

முத்தங்களால்
முதன்முதலாக
குளிப்பாட்டிய நாள்!

மடியினில்
மார்பினில்
தோள் என
தனது புறத்தையும்
குழந்தைக்கு அவள்
அளித்த நாள்!

முன்னோர்களின்
முகவரியோடு
வெற்றுக் கடிதமாக
வந்த நாள்!
அன்பின் மைத்தொட்டு
கவிதை நூலாய் ஆன நாள்!

வாழ்க! வாழ்க! என
எல்லோரும் வாழ்த்த
அவளின்
அன்றைய மகிழ்ச்சியை
ஒவ்வொரு ஆண்டும்
முகத்தில்
அகத்தில்
தாங்கும் நாள்!

—

சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு.
பெரிய நத்தம், செங்கல்பட்டு. 603002.
9944315732



# வெள்ள சோறு - ஒரு மதிய நேர கதை

காசெல்லாம் இருக்கு. கடை தான் இல்ல.

சாலை, சாலைக்கு பிரியாணி கடை திறந்து வெச்சிருக்கான். அது கூட என்னென்னவோ விக்கறான். இன்னைக்குனு பார்த்து என்னவோ வெள்ளை சோத்துக்கு அலையுது நாக்கு. தனித்திருப்பவன் பிழைப்பெல்லாம் இப்படித்தான்...மதிய வீதியில் நாய் மாதிரி அலையும். வீட்டுக்கே கொண்டு வந்து... ஊட்டி விட்டுட்டே போகிற கார்பரேட் கன்றாவிகள் ஒருவனிடமும் சோறு மட்டும் இல்லை.

எந்த சாமிக்கோ பொறந்த நாள் இன்று. பெரும்பாலும் பார்க்கும் இடமெல்லாம் காலியாக இருக்கிறது. பொது விடுமுறை... போட்டு தாக்குவது பேச்சிலர் ஸ்டமக்- ஐ தான்.

பர்ஸ் நிறைய காசை வைத்துக் கொண்டு... பற்றி எரியும் வயிற்றுக்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை. பிரெட் இருக்கிறதுதான். அதை தின்ன மூளை ஒப்பவில்லை. மனம் ஏங்கும் சோற்றுக்கு தான் இந்த பாடு. மூன்று நேரமும் கடையில் சாப்பிட்டு.... சமைக்க கற்றுக் கொள்ளாமல் போனது கூட ஒரு வகை இல்லிட்ரேட் தான்.

ஊரில் ஒவ்வொரு நேரமும் தட்டு நிறைய குவிந்திருக்கும் சோறு நினைவு வந்து இம்சிக்கிறது. மனசு இப்படித்தான். ஒன்றை காரணமே இல்லாமல் தேடினால் கூட விடாது. கண்டுபிடிக்க முடியாவிட்டாலும்.. அதில் தொலைந்து போக தயாராகி விடும். நண்பர்கள் இருக்கிறார்கள் தான். அதற்காக மதிய சாப்பாட்டுக்கு திடு திப்பென போய் நிற்க முடியுமா. பொதுவாகவே வேறு வீட்டில் சாப்பிட பிடிக்காதவனும் நான்.

எதிர் வீட்டில் குக்கர் சத்தம் சோற்று வாசத்தை காற்றில் நிரப்புகிறது.

பளபளன்னு உதிர்ந்த வெள்ளை சோற்றில்... எண்ணெய் மிதக்கும் கத்திரிக்காய் குழம்பை ஊற்றி பிசைந்து அள்ளி அள்ளி தின்ன கனா கண்டேனடி தோழி... என்று முனங்குவது எனக்கே பதற்றமாக இருக்கிறது. சொல்லொணா துயரம் இப்படி கூட வருமா என்று நினைக்க நினைக்க... இத்தனை வளர்ந்த புத்திக்குள்ளும் வயிறே பிரதானம் என்பது புலப்படுகிறது. கண்டதையும் குறை சொல்வதை விட சமைக்க கற்று கொள்தலில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. அது ஒரு சுயசார்பு. அதை பாட்டிகள் அம்மாக்களிடமும் அம்மாக்கள் அக்கா தங்கைகளிடமும்... அது அப்படியே மடை மாறி மனைவிகளிடமும் சென்று சேர்ந்து நம்மை போன்ற இமோஷனல் இடியட்களை நேரம் காலம் பார்த்து வெச்சு செய்து விடுகிறது.

பக்கத்து வீட்டு அங்கிள் நன்றாக பேசுவார் தான். சுமூகமான உறவும் இருக்கிறது. கேட்டு விடலாமா என்று கூட தோன்றியது. நெற்றியில் சுருங்கிய கவலையை தொண்டைக்குள் அழுத்தி முழுங்கும் எச்சிலிலெல்லாம் பசியும் ஆசையும் தான் சுரக்கிறது. ஊரு விட்டு ஊரு வந்து தன்னோடு தானே போராடும் ஒரு தனித்தவனின் திடீர் ஆசைகள் எல்லாம் இப்படித்தான்... வடிவத்தில் இல்லாமல் அலையும். நான் வீதியில் எதற்கு இறங்கினேன் என்று தெரியவில்லை. ஒவ்வொரு வீடாக பார்த்துக் கொண்டே நடப்பது ஆழ்மனம் விரும்பிய ஓர் அனிச்சையாக இருந்தது. அது ஒரு மாற்றாக தெரிந்தது. ஒவ்வொரு வீடும்... மதிய உணவுக்கு தயார் ஆகி கொண்டிருப்பதை... அந்த வீட்டின் முகப்பே காட்டி கொடுத்தது. குடும்பம் என்பதன் அர்த்தம் இப்படி சோற்றுக்கு அலைகையில் தான் புரிகிறது. காசு கொடுத்தாலும் வாங்க முடியாதது வெள்ளை சோறு. நான் சாட்சி.

கவலை கோபமாக மாறுவதற்கு சிறு நூல் இடைவெளி போதுமானது.

நான்காவது வீட்டில் என்னவோ சத்தம். வேகமாய் வெளியேறிய சித்தார்த்... என்னை பார்த்ததும் சட்டென என்னை துணைக்கழைத்துக் கொண்டான். அவனாகவே வேர்த்து சிவந்த முகத்தோடு புலம்ப ஆரம்பித்தான்.

"எப்ப பாரு சோருண்ணே... எத்தன தடவ சொல்றது... அதான்... விட்டெறிஞ்சிட்டேன்..." - அதை ஒரு வீரன் செயல் போலவே வாய் நடுங்க விவரித்தான். சுய தடவி கொடுத்தல் அவன் சொற்களில் சமாதானம் செய்தது.

எட்டி பார்த்தேன். ஹாலில் இருந்து விட்டெறிந்த சோற்று தட்டு வாசலில் கிடக்கிறது. பசி உடைந்த பற்கள் போல சோறு சிதறி கிடக்கிறது. விஷயம் புரிந்து விட்டது. பற்றிக் கொண்டு வந்தது. இரண்டு மணி நேரமாக அலைந்து போராடிக் கொண்டிருப்பது இந்த சோற்றுக்குத்தானே. உள்ளே பசி... மிருகத்தின் வாயை திறந்தது. இனம் புரிந்த கோபம்... இடம் பொருள் பார்க்காது. சட்டென அவனைப் பிடித்து தள்ளி உதைத்து ஏறி மிதித்து... போட்டு சவட்டி எடுத்து விட்டேன்.

என்ன ஏது என புரியாத சித்தார்த் தடுமாறி பயந்து கத்தி அலறி.... அதற்குள் ஆத்திரம் முழுக்க இறங்கி விட...."சோறுடா.... சோறு... சோறு..." என முனங்கி கொண்டே வீட்டை நோக்கி வேக வேகமாய் ஓட்டமும் நடையுமாக விரைந்தேன்.

சற்று நேரத்தில்... கதவு தட்டப்பட்டது.

பயம் உடல் முழுக்க. பதற்றம் மனம் முழுக்க. ச்சே என்ன வேலை பண்ணிட்டேன்... இப்ப... வம்பு வந்து நிக்க போகுது... எப்டி சமாளிக்க. என்னனு சொல்ல.

பசி வேறு ஆளையே குலைத்துக் கொண்டிருந்தது. நடுக்கம் கூட... மன்னிப்பு கேட்கும் மனநிலையை முகத்தில் தேக்கிக் கொண்டு மெல்ல கதவை திறந்தேன்,

சித்தார்த் அம்மா தட்டில் சோறோடு நின்று கொண்டிருந்தது.

—

கவிஜி.

---

# மௌனமாய் ஓர் ஒலிச்சிதறல்

உறவுகளின் நிராகரிப்பால் துளைக்கும்
கேள்விகளால்
ஊசலாடும் மனதோடு
பூங்காவின் இருக்கையில்
நிரம்பி வழியும் தனிமையில்
மூழ்கிக் கொண்டிருக்கும்
பொழுதெல்லாம்
ஒவ்வொரு நொடியும்
சிறகுகள் முளைத்து
பறந்துக் கொண்டேயிருக்கின்றன.

சருகுகளோடு காற்று
மௌனமாய் ஓர் ஒலிச்சிதறலை
நிகழ்த்திக் கொண்டேயிருக்க
புற உலகை துறந்து
அக உலகில் நுழைந்து
கண்மூடி அயர்கிறேன்
மீண்டும் மீண்டும்
சலனப்பட்டுக் கொண்டே
என் எண்ண அலைகள்
அழுத்திக் கொண்டேயிருக்கின்றன.

சற்றே நிமிர்ந்து
விண்ணை நோக்கி
பார்க்கையில்
எழுத்துகளற்ற நீலவானை
வாசித்துக் கொண்டே
நிரம்பிய ஞானத்தோடு
வெளியேறிக் கொண்டிருக்கிறது
மனதோடு
ஒலிச்சிதறல்கள்
நிகழ்த்திய
என் துயரங்கள் அனைத்தும்
மௌனமாய்...

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.



# நடைமேடை சமூகம்

சமுதாயமென்பது
வேறொன்றுமல்ல
ஓர் இரயில்வே
நிலையம்

முதல் நடைமேடைக்கும் இரண்டாவது
நடைமேடைக்கும் உள்ள
இடைவெளிதான்
இங்கு கருப்பொருளாகிறது

இரண்டாவது
நடைமேடையினைப் போல

முதல் நடைமேடைக்கு
சில படிக்கட்டுகளிலேறும்
சிரத்தை அவசியப்படுவதில்லை!

## இயலாமை

வந்தமரும் பறவைக்கு
மடிவிரிக்கிறது

சொட்டு தேடும்
வண்ணத்துப்பூச்சிக்கு
தேனூட்டுகிறது

இல்லம் தேடும்
சிட்டுக்கு கூடாகிறது

ஓடிவரும் அணிலுக்கு
கை நீட்டுகிறது

தன்னிலிருந்து உதிரும்
பூவை ஏந்தவியலாமையில்
மட்டுமே

ஒட்டுமொத்த மரமும்
தலைகவிழ்கிறது!

## நீர் இயந்திரம்

கொழுத்த
மீனைக்கண்டதும்
நாரையின் 'பேட்டரிகளனைத்தும்'
துல்லியமாய்
இயங்கத்
தொடங்குகின்றன!

## மல்லுக்கட்டல்

எடை கூடிட
வேண்டுமென ஒருபுறமும்
பழம் கூடிட வேண்டுமென
மருபுறமும் வேண்டுதல்களிருக்க

மையத்திலிருக்கும்
தராசுடன் மல்லுக்கட்டிக்
கொண்டிருக்கின்றன
மனமுட்கள்!

—

ரகுநாத் வ,
மதுரை.

# மை நனைத்த கவிதையொன்று

கசக்கிய இலையில்
கசிகிறது பச்சையம்
பசியோடு
வந்த புழுவிற்கு
காம்பில் மிஞ்சியது துளிரசம்

ஒரு துளி
ஒரு அடி உயரம் பெறலாம்
சிறு வளையம் பெறலாம்
வானத்தை வளைத்து
நீலத்தில் உணர்த்தலாம்
கண்ணாடி அணியாத வானிற்கு
அழகை கொடுக்கலாம்...

விரல் திணித்து
மை களைத்து
மேலும் கீழுமாய்
வரையப்பட்ட
அழுத்தம் தனையும்
அச்சினையும் ஏற்றதொரு
காகிதத்தில்
மை மட்டுல் புதுகலையாய்
ஆகிவிடுகிறது....

பட்டன் வடிவமெனினும்
பத்துக்கு பத்து கட்டம் வரையலாகும்
அழகியவள் கண்கள் திறவலாகும்
நுனியுறுந்து
நூற்றைம்பது சொற்களோ
நிரம்ப நிரம்ப
பல பலபத்தி கவிதையோ



ஓயாத
குறிக்கோள்தனில்
ஒன்றும்
இரண்டுமான
ஒற்றைக்காலில்
அர்த்தம் விளக்கும்
மை நனைத்த
கவிதையொன்று......!

## அனிச்சையில் விரலொடு

விரல் பற்றிடும்
தருணமெல்லாம்
சிறு மென்பறவை
சிறகை விரிக்க தொடங்குகிறது...

ஒட்டினில் வெண்ணிற
வண்ணமிட்டு
சாடை காண்பித்த
வழியெல்லாம்
இறுதி நாட்களின்
யதார்த்தமான நொடிகளின் வருகை...

கூடலிலும் ஊடலிலும்
ஒரு புள்ளி
இடம்பெயர்ந்து
வான் நிமிரப் பார்க்கிறது
வாசல்
மூடியா தொடர்கிறது
காலக்கட்டத்தினை.....

மீண்டும் ஸ்பரிசம் சிலிர்க்க
உரையாடி நகரலாம்
நலம் நலமறிய ஆவலாய்
காதோரம் சிறு மல்லிகையாய்...

## ஆறடியில் உலகம்

யாராகினும்
ஆறடிக்கு அடிமையாகி விடுகின்றனர்
அந்த காட்டுக்குள்
இருள் மட்டுமே
வந்து செல்லக்கூடும்
மரங்கள் கதை பேசி கழிக்கலாம்
காற்றோடு
உறவாடி திளைக்கலாம்
சிறு குடில் காலம் காலமாய்
நான்கு கால்கள்
ஊன்றியபடி நிற்கலாம்

நரனின் அளவிற்கு
இடம் கொடுத்து
முன்னும் பின்னும்
சுற்ற வழி கொடுத்து
ஓயாத கால்
வலியில் புதைக்கப்பட்டு
நிற்கின்றது
நரன் போல
ஓய்வுநிலையில்
ஓர்
நான்கு கால் கட்டிடப்பிராணி

அங்கே
நேற்று நியாயம் பேசியவன் உறங்கலாம்
நீதியை நிலைநாட்டியவன்
காற்றோடு கலந்திருக்கலாம்
கண்ணகியின் பேத்திகள் உறங்கலாம்
பட்டங்களை சுமந்தவரும் உறங்கலாம்
மண்பாரா சிசு உறங்கலாம்
அம்மாவிற்கு உதவிய பெண்
அறையங்குறையுமாக
எரிதழலில் வெந்திருக்கலாம்....

வெட்டியானை பழித்தவன் வேறு
வழியின்றி கட்டையில் அடி
வாங்கியிருக்கலாம்
உணவில்லாமல் இறந்தவன்
படையலில் எரிமேடையை சுற்றி
அலைந்திருக்கலாம்...

சாதி பார்த்தவன்
வேறு வழியின்றி
பிறர்கையில் ஏந்தப்பட்டிருக்கலாம்
வெற்றிலை போடாதவன்
அன்று வெற்றிலை போட்டிட
நேர்ந்திருக்கலாம்
சொத்து சேர்த்தவன்
ஆறடிக்கு கையொப்பமிட
வந்திருக்கலாம்
கடந்து செல்லும் பொழுதெல்லாம்
எந்த இடமென பார்த்தவன்
இன்று எட்டிப்பார்த்திருக்கலாம்...

பன்னிரண்டைக்
கடக்காத பிஞ்சுகள்
விளையாடலாம்
பருவம் அறியா பிஞ்சுகள் உடற்பசிக்கு
உருக்குலைந்து உறங்கிக்
கொண்டிருக்கலாம்
காமம் தின்ற சிசுகள் பயத்துடன்
எரிந்தோ புதைத்திருக்கலாம்
திறந்த வாசல் திறந்தேதான் கிடக்கிறது

காலம் கதவிற்கு தாழிடாமல்
வரவேற்கதான் செய்கிறது
ஒருவர் வருகையில்
ஒருவர் பிழைக்க வேண்டி

ஆறடி
இன்றும் ஆறடியே.....

## ஊடல் காகிதம்

அழகிய முகம் சுழிக்கப்பட்டது
அந்திவான காது மடல் கனமேறியது
முக்கனியாம் மூக்கின் நுனி சிவக்கத்
தொடங்கியது
பஞ்செனும் பாதங்கள் பூமியை
கழுத்தோடு திணிக்க தயாராகிவிட்டன.
கொக்கரித்த கொலுசோடு சிறு இடி
முழங்கத் தொடங்கியது
வாஞ்சை வசைகள் வகைகளாக
இசைபாட துளிர்கின்றன
செவ்வானத்தை ஒரு கையிலும்
நற்பூமியை மறுகையில் மாறாப்பில்
ஈர்த்து செருக தயாரானாள்
இடையின் இடைவெளியிலும் சேர்த்து...
தைரியமாக சொல்லிவிடுகிறேன்
"சாரி டி " என்று
சற்றும் யோசிக்காமல் உயிரழந்த
துப்பட்டாவும்
துளிர்விட்ட மன்னிப்பு காகிதமும்
சற்றும் சலிக்காமல் எறியப்படுகிறது
அத்தனை ஊடல்களையும்
நிரப்பி கிழித்தெறியப்பட்ட
அட்டானிக்கால் போஸ்களில் மிளிரும்
அன்பின் காகிதமாய்
மன்னிப்பில் கசங்கிய
ஊடல் காகிதங்கள்......!

## யாரேனும் பார்த்தீரா...!

அந்த சிறு காதோரம்
குலுங்கிவிடும் தோடின்
ஆட்டத்தில்
மொத்த உலகமும் ஆடிவிட்டதினை
யாரேனும் பார்த்தீரா...!

உருவமற்ற நிழலோடு
ஒன்றிய ஓர் மனநிலை முற்றிய
காதலுக்கு நீர் பாய்ச்சிய அழகினை
யாரேனும் பார்த்தீரா...!

கண்களைப் பொற்றிக்கொண்டு
அரங்கேறிவிடும் காதலினை
அவள் கோவத்தில் யாரேனும்
பார்த்தீரா...!

நீண்ட நாட்களுக்குப் பிறகு
நீ உடுத்திய புடவையில்
ஒரு மடிப்பு மட்டும் அதிகம்
படிந்துள்ளது
சிறு இடையாய்......!

கருப்பு மையும்
கனவு மையும் தீர்ந்துவிட்டபிறகு
எனது கைவிரல் பிடித்து
இதயத்தை பிழிந்து
ஒரு சொட்டாக்கி வரையப்படுகிறது
உனது புகைப்படம்...
இருப்பினும்
இதயம் சற்று பலகீனம் தான்....!

பூக்களைப் பார்த்தபடி
நான் ஆராதிக்கின்றேன்
நீ உலகையே
சுமந்தபடி
இரு கன்னங்களை தட்டி தட்டி
கூவுகிறாய்

பூக்களை
நீ பிடித்த பூவும்
உன் கன்னம் தொடுத்த பூவும்
தீ அறியாமலே விலையேறிப் போய்விடுகிறது....
விலையேற்றம் சற்று அதிகம்தானே
உன் இடையேற்றத்தில் அமர்ந்த பூக்களாய்...!

—

கவிஞர் சே கார்கவி,
நாகப்பட்டினம்.

---

# ஊருக்கு புறப்படும் போதெல்லாம்

உறங்கிக்கொண்டேயிரு
மகனே,
நீ விழித்திருந்தால்
என்னை நீயும்
உன்னை நானும்
பிரிந்து செல்வது இயலாத ஒன்று!

**

தனிமையைப் பற்றி
கவிதையெழுதுகிறாய் நீ
தனிமையில்
உன் நினைவுகளை அசைபோடுகிறேன்
நான்...
இரண்டும் கவிதையாகலாம்
நாளை!

**

காக்கையும் குருவியும்
எங்கள் சாதியென
பாடிய பாரதி
கண்ணீரோடு
கடந்து கொண்டிருக்கிறான்...
சாதி சண்டையால் சிதைந்து
கிடக்கும் மனிதர்களை!

—

மு. முபாரக்,
திருச்சி.



# நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு

மறக்கத் தெரியாதா ???
பழகத் தெரிந்த உயிரே உனக்கு விலகத் தெரியாதா ??

டீக்கடையில் ஒலித்த பாடல்
கேட்டதும்.,

எம்.ஜி.ஆர் என்றார் ஒருவர்,
எம்.எஸ்.வி என்றார்
இன்னொருவர்,
கண்ணதாசன் என்றவர் தலைதூக்காமல
காஃபியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்...
தேவிகா என்றவரின்
முகத்தில் அப்படியொரு
வெட்கம் ...

எதுவும் பேசாமல்
பத்து ரூபாய்
லெமன் டீ க்கு
ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டு
சில்லறை வாங்காமல்
நடக்கும் எனக்கு

எவருமே தெரியவில்லை
உன்னைத்தவிர.

—

## மெல்லக் கரைகிறது

கதைபேசியபடி
கோர்த்துக் கொண்ட
அங்குலியிடை வெப்பம்...

வடியாப் புனலென
சொட்டிடும் ஈரம்
உதிர்கிறது செதில்முளையும் அதரத்தில்...

பாதைபார்த்தே
பழுப்பேறிய விழிகளில்
கூடுகட்டி அமர்கிறது
ஓர் கருநிறஅன்றில்...

அழுகையைத் தின்று செரிக்கும்
இக்கூதற்கால
இரவுகள் ஒரு முடிவிலிப்பயணம்...

கண்டு, கலந்து
முயங்கி
சலசலக்கும்
சிற்றோடையில்
சிலிர்த்து
மார்விழுந்த ஆம்பலை அள்ளிப் பார்க்க
நினையும் என்னோடு
கண்ணாமூச்சி ஆடுகிறான்
என் அல்லா(ஆ)தவன்.

—

இனியவன் காளிதாஸ்.

## மத்தாப்பூ

பின்னிய ஒற்றை ஜடையை
முன்னால் போட்டுக் கொண்டு
கையில் எடுத்துச் சுற்றுகிறாய்

அப்படிச் சுற்றும் போது
உனக்கு வாய்த்து விடுகிறது
தீபாவளிக்கு முதன் முதலாக
கம்பி மத்தாப்பு சுற்றும்
நடை பழகும் மழலையின் சாயல்
மத்தாப்பின்
வெளிச்சத் துகள்களைப்
போலத் தான் இருக்கிறது
உன் சிரிப்பும்

எனக்கு வாய்க்கிறது
திருவிழாவின் போது
இராட்சச ராட்டினத்தில்
சுற்றும் அனுபவம்

எனக்கு சிலசமயம் இராட்சசியாய்
பெரும்பாலும் இரட்சகியாய்
இருக்கும் உனக்கு
கூந்தலில் சூடும் பூச்சரம்
இருளைப் பரிகசிக்கும் நட்சத்திரங்கள்
எனக்கோ பூ வைத்த உன் கூந்தல்
நட்சத்திரங்களைப் பரிகசிக்கும் இருள்

நட்சத்திரங்கள்
இருளைப் பரிகசிக்கிறதா?
இல்லை இருள்
நட்சத்திரங்களைப் பரிகசிக்கிறதா?
என்பதை
நாம் இருவரும்
இரவு முழுவதும்
வானம் பார்த்துத்தான்
கண்டடைய வேண்டும்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

---

## உன்னை கண்டுகொண்ட

நாட்களில் தான்.....
நான் தொலைந்திருக்கிறேன்..
தேடாத என்னை - உன்னை
தொலைத்த பின்னே
தொலைந்ததை உணர்கிறேன்.
இன்றுவரை கிடைக்காத என்
முகவரியின் தேடல் தொடருமோ
என் ஆயுளின் எல்லைவரை.....
தொலைத்தூரம் காணும்
கானலையும் வேகமாகக் கடந்து
பார்க்கிறேன். மேலும் மேலும்
முன்னோக்கி அழைத்து செல்கிறது.
ஏமாற்றத்தின் முடிவில் மீண்டும்
திரும்புகிறேன் அதே புள்ளியின்
மையத்திற்கு....
கடக்கும் காற்றையும் கைத்தட்டி
நிறுத்திக் கேட்கிறேன். மாறாக
உயரே மரக்கிளையை அசைத்து
பூக்களை உதிர்த்துவிட்டு செல்கிறது.....

—

கவியாசகன், ஈழம்.

# முயற்சி

ரகுராம் ஏழைக் குடும்பத்தில்
பிறந்தவன்.

கிடைக்கும் வேலைக்குச்
சென்று வாழ்க்கை
நடத்தும் கூலித்தொழிலாளி
தான். ஆனால்
இன்று அவன்
மிகப்பெரிய கோடீஸ்வரன்
ஆனது எப்படி என
ஊர் முழுதும் ஒரே
பரப்பரப்பான
பேச்சுகள் தான்.

இவரை பற்றித்
தெரிந்துக் கொள்ள
வேண்டுமென
பிரபல ஊடகவியலாளர்
ஒருவர் பேட்டிக் காண
நீண்ட பயணம் மேற்கொண்டு
அவரின் வீட்டை
அடையும்போது
இரவு வேளையாகி
விட்டது.

அந்த நேரம் மின்சார
தடை ஏற்பட்டிருந்ததால்
மெழுகுதிரி எரிந்துக்
கொண்டிருந்தது.
பத்திரிக்கையாளரைக்
கண்டவுடன் வரவேற்று,
உள்ளே சென்றதும்

கோடீசுவரன் ரகுராம்
பேட்டி எடுக்க வெகு
நேரம் ஆகுமில்லையா?
அவ்வளவு நேரம்
மெழுகுதிரி எரிய
வேண்டுமா? எனக்
கேட்டுக்கொண்டே மெழுகுதிரியை
அணைத்ததும்,
"நீங்கள் எதுவும்
சொல்லவேண்டாம்.

எனக்கு எல்லாம்
புரிந்துவிட்டது" எனக்
கூறி வெளியேறி
விட்டார் ஊடகவியலாளர்.

முற்றும்

—

மு. ஜெரோஷா,
திருப்பூர்.

# ஆற்றல் மிக்க ஹைக்கூ கவிஞர்




நூல்: குடை பிடிக்கும் நதி
ஆசிரியர்: திரு.சா.கா. பாரதி ராஜா
விலை: ரூ.70/-

பார்க்கும் காட்சிகளை வித்தியாசமாக சிந்திப்பது ஹைக்கூ கவிஞர்களின் தனிச்சிறப்பு. அந்த வரிசையில் கவிஞர் சா.கா. பாரதிராஜா அவர்கள் தான் கண்ட காட்சிகளை கூரிய சிந்தனை மூலம் அதே காட்சிகளை வாசகர்கள் மனத்திலும் காணச் செய்வதிலும் உணரச் செய்வதிலும் சம்மணமிட்டு அமர்ந்து கொள்கிறது அவரது ஹைக்கூ கவிதைகள்.

""நூலறுந்த பட்டம் மீண்டும் பறக்க விடுகிறது மரக்கிளை"

கதைகளில் வரும் திருப்புமுனை போல் மூன்றாம் அடியில் அவர் பயன்படுத்தி இருக்கும் வரி திடீர் தாக்குதலை ஏற்படுத்தி படிப்பவர்களின் மனதில் நீங்காத இடம் பிடித்து விடுவதுடன் காட்சிப்படுத்தியும் விடுகிறது.

"வெயிலில் வேலை செய்கிறாள் சற்றே இளைப்பாற அழைக்கிறது குழந்தையின் அழுகை

இந்த வரிகள் படிக்கும் போது தாயுடன் குழந்தை இருக்கும் காட்சி அனைவரின் மனதிலும் கட்டாயம் வந்து போகும். அம்மாவின் தொடர் வேலைக்கு நடுவே சற்று ஓய்வு தருகிறது இந்த குழந்தை.

கவிஞர் தனது சிந்தனை பேராற்றலால் நம் சிந்தனையை தூண்டச் செய்து சுடர் மிகு ஒளியை எங்கும் பரவச் செய்து விடுகிறார்.

"திடீர் வானவில்லில் நாணலை ஏற்றுகிறது மலையின் உச்சி"

படிக்கப் படிக்க வெடிதாக்குதலை ஏற்படுத்திவிடுகிறது. ஆற்றல் மிகு சொல்லாடல் கூரிய சொல்லாட்சி சிறப்பு மிக்க வரிகள் தேர்ந்த ஹைக்கூவாக மாறிவிடுகிறது.

"பூச்சூடவில்லை மகிழ்ந்த முகத்தோடு மயானப் பாதை

ஹைக்கூவை இயங்கு நிலைக்கு உட்படுத்தி தனது கருத்துக்களை இயக்க வைத்திருக்கிறார் கவிஞர் சாகா பாரதிராஜா அவர்கள்.

"கொல்லப்பட்ட மூலிகை உயிர்த்தெழுகிறது மரணத்திலிருந்து மீண்டெழும் மனிதன்

' நிலவில் தண்ணீர் இன்று உறுதியானது குளத்தில் நிலா

வாழ்வின் நுகர்வுகளை கையாளாமல் எந்த கவிஞராலும் எழுதிவிட முடியாது. அத்தகைய உணர்வுகளை நம்முடன் கைகோர்த்து வாசகர்களுடன் கொண்டு செல்கிறார் கவிஞர் சா.கா. பாரதிராஜா அவர்கள்.

"விண்வெளிப் பாடம் விண்ணில் பறக்கிறான் அயர்ந்துறங்கும் மாணவன்"
"வளர்த்ததற்கு நன்றியாக விசிறுகிறது உழவனுக்கு வயலில் மரம்"
கவிஞனின் இந்த கற்பனை திறனை நிச்சயம் பாராட்டாமல் இருக்க முடியாது.

"வெண்மேகம் காளான் குடையானது இலையுதிர்ந்த மரத்தின் மேல்"

ஒரு மின்னல் தாக்குதல் கவிஞர்களின் மனதில் தாக்கும் போது ஹைக்கூ பிறந்து விடுகிறது அதே மின்னல் தாக்குதல் படிப்பவர்களின் மனத்திலும் ஏற்படுத்தி விடும் போது ஹைக்கூ வென்று விடுகிறது. இத்தகைய தனிச்சிறப்பை இயல்பாய் பெற்றுள்ளார் திரு சா. கா. பாரதிராஜா அவர்கள்.

"எரியும் விளக்கு அருகில் விழும் மழைத்துளிகளும் விளக்காக எரிகின்றன

குடை பிடிக்கும் நதி ஹைக்கூ  மழைத்துளிகளையும் நினைவுத் துளிகளையும் சொட்டச் சொட்ட தந்து நம் சிந்தனைகளை தூண்டிவிடும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

குடை பிடிக்கும் நதி ஹைக்கூக்களை தடம் பதித்துச் செல்கிறது.

நூல் வேண்டுவோர், தொடர்புக் கொள்க...

**திரு. சா. கா. பாரதி ராஜா, கைப்பேசி: 9944315732**

—

நூல் விமர்சனம்,

பெ. விஜயலட்சுமி,

காஞ்சிபுரம்.

# என்னைச் சுற்றி பலவண்ண நிலவுகள்....

போற்றுவோர் போற்றலும்
தூற்றுவோர் தூற்றலும்
சமமென பாவித்து
சொந்தம் பந்தம் அனைத்துக்கும்
சேர்ந்து செய்யும் பாந்தமான
வானத்தை போல நிலவு......

பூ தோறும் என் புன்னகை
தேடுமோ எனைப் பார்க்கும்
நொடியில் மலர் பறித்து நீட்டும்
அல்லது பூ வடிவில் எதையோ
ஒன்று புன்னகைத்துக் கொடுக்கும்
பிள்ளை நிலா.......

எனக்கான ஒளி தந்து
எனை உச்சியிலமர்த்தி
பார்க்க நினைக்கும் என்
வானின் சூரிய நிலா.....

என் முகமேகத்தில்
ஒரு போதும் இருள் சூழ
விடாது என்னைச் சூழ்ந்த
இருட்டை விரட்டும்
பிறை நிலா.....

அமாவாசை அம்புலியாய்
வெளிச்சப் பூக்களை வெளிக்காட்டாது
தன்முனைப்புக்குள் ஒளித்த
கர்வம் கொண்ட மறை நிலா.....

என்ன வண்ணமோ
எண்ணம் எவ்வண்ணமோ
பிறையோ மறையோ
ஒளிசிந்தியோ ஒளிந்தோ
மன வானில் பூத்த
நிலவுகள் தேய்வதில்லை
ஒருநாளும்.....

--

ஜோதி சரண்.

**பூவில் உறங்கும் தேனைப்போல்**
**உனக்கான வார்த்தைகளெல்லாம்**
**என் நாவின் கீழ் உறங்குதடா.**
**உன் பெயர்ச்சொல்லி.........!!!!!**

**ச. இராஜ்குமார்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

# வெற்றிக்கனி...!

வேர்வை மொட்டுக்கள்
பூமியில் உதிர்ந்து...!
பூக்களாய் மலர...
வெற்றிக்கனி விரைவில்
கிட்டும்......!

கற்ற கலைகள் கைகொடுக்க...!
பெற்ற அனுபவம்...
புகழ் கொடுக்க...!
உழைப்பே உயர்த்திடும்...
உலகில் உன்னை...!

விடா முயற்சியும்...!
அயரா உழைப்பும்...!
ஆகாயம் தொடும்...
அரியணை தந்திடும்...!?

சோம்பல் முறித்து....
சுகங்கள் விடுத்து...!
பயங்கள் விரட்டி...
பாதை தொடர்ந்தால்....!
விடியல் தெரியும்..
வினைகள் தீரும்....!

தடைகள் தகர்த்து...
தடயம் செய்து....!
தன்னம்பிக்கை ஏற்று...
தரணியில் வெல்வாய்..!
வரலாறு உன்னை...
வாசலில் வரவேற்கும்....!?

—

முனைவர் சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.





**S. நிசப்த் வர்மன்,**
**3ஆம் வகுப்பு,**
**மன்னார்குடி.**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.